பக்கங்கள் : 12+கல்விச்சுடர்

# உதயன்

Registered as a New[illegible]

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 02 வியாழக்கிழமை (16.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :109

## ஜெனீவா இணக்கப்பாடு அரசினால் உதாசீனம்

# புலிகளின் ஆட்சேபனை இன்று நோர்வேயிடம் நேரில் தெரிவிப்பு

## கிளிநொச்சியில் தூதர் பிரட்ஸ்கரிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பார்

கிளிநொச்சி, மார்ச் 16

**ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் களையப்படும் என ஜெனீவாவில் இடம்பெற்ற முதல் சுற்றுப்பேச்சுகளின்போது காணப்பட்ட இணக்கத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாமல் உதாசீனம் செய்வதோடு, அந்த இணக்கத்துக்கு மாறாக ஒட்டுப்படைகளை ஆயுதங்களுடன் செயற்படும் வகையில் இயக்கிவருகிறது எனக் குற்றம் சுமத்தும் விடுதலைப் புலிகள் இதுதொடர்பான தமது ஆட்சேபனையை இன்று அனுசரணைத் தரப்பான நோர்வேயிடம் நேரில் தெரிவிக்கவிருக்கின்றனர்.**

**இன்று கிளிநொச்சி வரும் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்த ஆட்சேபனையை நேரில் தெரிவிப்பார் என அறியவருகின்றது.**

தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ருப் ஹொக்லண்டும் விசேட ஹெலிகொப்டர் மூலம் இன்று காலை வன்னி விரைகின்றனர்.

காலை 10 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர்மட்டக் குழுவுடன் அவர்கள் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபடுவர் எனத் தெரிகின்றது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தில் இன்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்.மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதை யாழ். செயலக வட்டாரங்கள் நேற்றிரவு உறுதிப்படுத்தின. (எ-3-185)

## கூட்டமைப்பினர் திங்களன்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

கிளிநொச்சி, மார்ச்16

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை 20ஆம் திகதி விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பு கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் அன்று முற்பகல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் நேற்று பஸ்மீது குண்டுத்தாக்குதல்

ஏறாவூர், மார்ச் 16

வழைச்சேனை பிரதான வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்மீது நேற்று (புதன்கிழமை) காலை குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலினால் பஸ்ஸின் ஒருபகுதி எரிந்து நாசமாகியுள்ளதுடன் இரண்டுபேர் காயமடைந்தனர். இவர்கள் வாழைச்சேனை

(12ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச்சுடரில்

தரம் 5 புலமைப் பரிசில் வினாத்தாள்.
தரம் 10 - தமிழ் பகுதி III, தரம் 09 - தமிழ்,
தரம் 10,11 விஞ்ஞானம்.

# புலிகள் ஆயுதங்களைத் தாம் கைவிடாதவரை ஒட்டுப்படைகளிடமிருந்தும் களையமுடியாது

## ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் வியாக்கியானம்

கொழும்பு, மார்ச் 16

"ஒட்டுப்படையினரின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்றால் முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும்.

"புலிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே ஒட்டுப்படையினர் ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். அவர்களை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு அரச படையினர் கட்டளையிட்டால் அவர்கள் படையினருக்கு எதிராகப் போராடுவர்."

- இவ்வாறு ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகரும், முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபரும், ஜாதிக ஹெல உறுமயப் பிரமுகருமான எச்.எம்.ஜீ.பி.கொட்டகதெனிய தெரிவித்துள்ளார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் ஆயுதங்களை ஏந்த உரிமை பெற்றவர்கள் அரச படையினர் மட்டும்தான். ஆனால், புலிகளிடமிருந்து தங்களைப் பாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு படைத்தரப்புக் கோரிக்கை

### ஆனால் இயலாது எனத் தேர்தல் அதிகாரிகள் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பல்வேறு வாக்களிப்பு நிலையங்களை ஒன்று சேர்த்து - ஒரே இடத்தில் - கொத்தணி அடிப்படையில் அமைக்கவேண்டும் என்று படைத்தரப்பு யாழ். தேர்தல் திணைக்களத்தைக் கேட்டுள்ளது.

குடாநாட்டில் தேர்தல் நடத்துவது தொடர்பாக படை அதிகாரிகளுக்கும் யாழ். தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று பலாலி படைத்தளத்தில் இடம்பெற்றிருக்கிறது.

'குடாநாட்டில் கூடுதலான வாக்களிப்பு நிலையங்களை பல்வேறு இடங்களிலும் அமைத்தால் அவை அனைத்துக்கும் ஒரே சமயத்தில் பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் ஏற்படும். எனவே, கொத்தணி அடிப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக விரிவுரைகள் நேற்று முழு அளவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ். பல்கலைக் கழகத்தின் சகல துறைகளையும் சேர்ந்த அனைத்துவருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகச் சூழலில் இராணுவ நெருக்குவாரங்கள் நீக்கப்பட்டு மாணவர்கள் பாதுகாப்பான சூழலில் கல்விகற்கக் கூடிய நிலை உருவாக வேண்டுமெனக் கோரி மாணவர்கள் கடந்த ஒருமாதகாலமாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்துவந்தனர்.

பின்னர் நிலைமை ஓரளவு சுமூகமானதையடுத்து, இறுதிவருட மாணவர்களுக்கான விரிவுரைகள் கடந்த எட்டாம் திகதி ஆரம்பமாகின.

இதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட விரிவுரைகள் நேற்று முழு

(2ஆம் பக்கம் பார்க்க)

## தபால்மூல வாக்களிப்பில் தமிழரசுக் கட்சிக்கு பலம் சேர்க்க அரச ஊழியர்களுக்கு விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்16

உள்ளூராட்சித் தேர்தலின்போது தபால் மூலம் வாக்களிக்கவுள்ள அரச அலுவலர்கள் தமிழ்த் தேசிய அபிலாஷைகளை முன்னிறுத்திநிற்கும் தமிழரசுக் கட்சியின் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு, தமது ஆதரவை வழங்கவேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது யாழ். மாவட்ட தேசிய விழிப்புணர்வுக் கழகம்.

'உள்ளூராட்சி சபைத் தர்தல்கள் - 2006, தபால் மூல வாக்களிப்பு' என்ற தலைப்பில் மேற்படி கழகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

அரச ஊழியரின் போராட்டத்துக்கு ஆதரவாக

## அதிபர், ஆசிரியர்களும் இன்று சுகயீன விடுமுறையில் குதிப்பர்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஒரு நாள் சுகயீனலீவுப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றையதினம் சுகயீனலீவுக்கு அறிவித்துவிட்டு பாடசாலைக்குச் செல்லாமல் போராட்டம் வெற்றியளிக்கப் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார்.

போராட்டம் தொடர்பாக, பொதுச்செயலாளர் மகாசிவம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

(2ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்குப் போதிய உதவிகள் கிடைக்கவில்லை

## நோர்வே அதிகாரி திருமலையில் தெரிவிப்பு

திருகோணமலை,மார்ச்16

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தென் பகுதி மக்களுக்குக் கிடைக்கும் உதவிகள் வடக்கு - கிழக்கு மக்களுக்குக் கிட்டவில்லை. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வடக்கு - கிழக்குப் பிரதேச மக்களுக்கு கூடுதல் உதவிகள் - அதாவது தெற்கு மக்களுக்குக் கிடைத்தளவு உதவிகள் - கிடைக்கக் கரிசனை காட்டிவருகின்றன.

- இப்படிக் கூறினார் நோர்வேயின் ஆழிப்பேரலை நிவாரணத்துக்குப் பொறுப்பான விசேட அதிகாரி எரிக் எவ் வீட்.

திருகோணமலைக்கு நேற்று வருகைதந்த அவர் கிண்ணியாவில் வீடமைப்புத்திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நோர்வே அரசின் உதவியுடன் கிண்ணியாவில் அமைக்கப்பட்ட வீடுகளைத் திறந்து வைப்பதற்காக அவர் நேற்று திருமலை வந்திருந்தார்.

அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

தென்பகுதிக்குக் கிடைத்த அளவு உதவிகள் வடக்கு - கிழக்குக்கு கிடைக்கவில்லை என்பதை உணர்ந்துள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், கூடுதல் உதவிகளை வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்குவதில் கரிசனை காட்டிவருகின்றன.

தெற்குக்கு வழங்கிய அளவு உதவியை வடக்கு -கிழக்குக்கும் வழங்க உதவும் நாடுகள் ஏற்பாடு செய்துள்ளன. அந்த உதவிகள் விரைவில் கிட்டும் என நம்புகிறோம் - என்றார் அவர். (எ-3-151)

## தென்மராட்சி வலய கணிதபாட பரீட்சை இன்று நடைபெறா!

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இன்று நடைபெறவிருந்த தரம் 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கணிதபாட வலய மட்டப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (எ-117)

## நேர்முகப் பரீட்சை

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் 2005/2007 கல்வியாண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது. (எ-14)

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு மாவை எம்.பி. கோரிக்கை

## ஜனாதிபதிக்கு நேற்று அவர் அவசர மகஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:-

உள்ளூராட்சித் தேர்தல் நெருங்குகிறது. அத்துடன், தேர்தலுக்கு இன்னமும் 15 நாள்களே உள்ள நிலையில் - அது தொடர்பான ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் வேளையில், இந்தக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப்பேச்சுகளின் பின்னர், இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்றும் - கோருகின்றேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-3)

# வடமராட்சியில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் விவரம் படையினரால் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்16

வடமராட்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர், மக்கள் பாவனையிலுள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் விவரங்களைத் திரட்டும் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

தற்பொழுது முதற்கட்டமாக வடமராட்சியில் இருந்து ஏனைய பகுதிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பயன்படுத்தும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களின் விவரங்களைப் பெறும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, பஸ்ஸிற்காக வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வருவோர், தாம் நின்று பஸ் ஏறும் தரிப்பிடங்களுக்கு அருகிலுள்ள வீடுகளில் அல்லது கடைகளில் அவற்றைப் பாதுகாப்பாக தரிக்கவிட்டுச் செல்வது வழக்கம்.

இவ்வாறு பாதுகாப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் தரிக்க விடப்படும் இடங்களுக்குச் செல்லும் படையினர் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களின் பெயர் விவரங்களை அவர்களிடமிருந்து பெற்றுத் தமக்கு ஒப்படைக்குமாறு வீடு மற்றும் கடை உரிமையாளர்களைப் பணித்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ-15)

# புலிகளின் ஆட்சேபனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து, ஆயுதங்களுடன் எந்தக் குழுவும் இயங்குவதைத் தடைசெய்வோம் என்று முதல் சுற்று ஜெனீவாப் பேச்சுகளின்போது தாம் வழங்கிய உறுதிமொழியை இலங்கை அரசு உதாசீனம் செய்துவருவதாகப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிழக்கில் - குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் - விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளில் துணைப் படைகளை இலங்கை அரசுப் படைகள் தொடர்ந்து முனைப்பாக ஈடுபடுத்திவருகின்றன எனத் தெரிவித்து, அப்போக்கைக் கடுமையாகச் சாடியுள்ள விடுதலைப் புலிகள், இச்செயற்பாடு தொடர்ந்தால் ஏப்ரல் 19ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் உத்தேச - இரண்டாம் சுற்று - பேச்சுகளில் பங்குபற்றுவதா என்பதைத் தாம் மீள்பரிசீலனை செய்யவேண்டி நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர்.

அமைதிப் பேச்சுகள் தொடர்வது இத்தகைய சர்ச்சையால் கேள்விக்குள்ளாகியிருப்பதை அடுத்தே, நிலைமையைச் சீர்செய்வதற்காக நோர்வேத் தூதுவரும், கண்காணிப்புக் குழுத் தலைவரும் கிளிநொச்சி விரைகின்றனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுத் தொடர்வதற்காக மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் உருவாக்கப்பட்ட நல்லிணக்கச் சூழ்நிலையைக் குழம்பவிடாமல் பார்த்துக்கொள்வதில் நோர்வே அனுசரணைத் தரப்பு அதிக கரிசனையுடன் இருப்பதாகத் தெரிகின்றது.

அதன் காரணமாகவே, அடுத்த சுற்றுப் பேச்சுக் குறித்து புலிகள் அதிருப்தியும், சந்தேகமும் வெளியிட்டகையோடு கிளிநொச்சிக்கு பறந்து சென்று, நேரில் விடயங்களைக் கையாண்டு, இணக்கத்தன்மையை உறுதிப்படுத்துவதில் நோர்வே அதிகம் கவனம் செலுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

இன்று கிளிநொச்சிக்குச் செல்லும் நோர்வேத் தூதுவர் இலங்கை அரசின் செய்தி அல்லது தகவல் எதையாவது புலிகளுக்குத் தெரிவிப்பதற்காக எடுத்துச் செல்கின்றாரா என்பதை உறுதிப்படுத்தமுடியவில்லை. (எ-க)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் நடைபெற்றன.

குடாநாட்டைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் நேற்றையதினம் விரிவுரைகளுக்கு வருகைதந்திருந்தனர் என்றும் -

வெளிமாவட்டங்களிலிருந்து வந்து கல்வி பயிலும் மாணவர்களின் வரவு குறைவாகி இருந்தது என்றும் - பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், ஒரு சில நாள்களின் பின்னர் வெளிமாவட்ட மாணவர்களின் வரவு முழு அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் - அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (எ-14)

# எம்.பி. பதவி பறிபோனமையை ஆட்சேபிக்கும் எஸ்.பியின் அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு உயர்நீதிமன்றம் ஏற்றது!

கொழும்பு, மார்ச் 16

தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமை தொடர்பாக, அதனை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கா நேற்று உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனு நேற்றே உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதையடுத்து, அதனை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்க, காமினி அமரதுங்க, சலிம் மர்சூக் ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயமே இந்த மனுவைப் பரிசீலித்த பின்னர் அதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

அந்த மனுவில் எஸ்.பி.திஸநாயக்க குறிப்பிட்டிருந்தமுக்கிய அமசங்கள் வருமாறு:-

நான் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மூன்று மாத காலத்துக்கு ஒரு தடவை நாடாளுமன்றத்தில் பிரசன்னமாவதற்கு என்னைக் கூட்டிச்செல்லுமாறு சிறைச்சாலை ஆணையாளரைக் கோரியிருந்தேன். நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அறிவித்திருந்தேன். ஆனால், அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மூன்று மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு சமுகம் தராத காரணத்தைக் காட்டி எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றுக்கு சமுகம் த்ரும் எனது உரிமையை மறுத்ததன் மூலம் எனது பதவி ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது இது எனது அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும் - இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மனுவில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், சிறைச்சாலைகள் ஆணையாளர், தேர்தல்கள் ஆணையாளர், சபாநாயகர் சட்டமா அதிபர், எஸ்.பி.திஸநாயக்கவின் இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றிருக்கும் ரேணுகா ஹேரத் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவைப் பரிசீலித்து விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் விசாரணையை ஜுலை 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (எ-க-13)

# அதிபர், ஆசிரியர்களும்....

(முதலாம் பக்கத் தொடச்சி)

* அண்மையில் அரசு வெளியிட்ட சம்பளம் மாற்றியமைப்புத் தொடர்பான சுற்றறிக்கை அனைத்து அகில இலங்கைச் சேவையினருக்கு 65 வீதம் சம்பள உயர்வை வழங்கியுள்ள போதும் அதிபர்கள், ஆசியர்களுக்கு 30 வீதத்திற்கும் குறைவான சம்பள உயர்ச்சியை மட்டுமே வழங்கி அதிபர்களின், ஆசிரியர்களின் அந்தஸ்த்தைக் குறைத்துள்ளது. அரசின் இந்நடவடிக்கையைக் கண்டித்தும் -

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆகிய மூன்று சேவைகளும் சமமானதும், சமாந்தரமானதும் எனப் பிரகடனப் படுத்தி, அகில இலங்கைச் சேவைகளுக்கு வழங்கப்படுவது போன்ற சம்பள உயர்வை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் கோருகின்றது.

* பாடசாலைச் சூழலில் உள்ள அரச படையினரின் காவல் அரண்கள், சோதனைச் சாவடிகளை அகற்றுவதுடன், படையினரின் பிரசன்னத்தையும் ரோந்துகளையும் விலக்கி ஆரோக்கியமான கற்றல் கற்பித்தலுக்கு வழி வகுக்க வேண்டும்.

* 8ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்திற்கான தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கான பாடநூல்கள் முதலாம் தவணை முடிவடைகின்ற நிலைக்கு வந்துள்ள போதும், 90 வீதமான பாடநூல்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பை மறுக்கின்ற அரசின் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தும் மேலும் தாமதமில்லாது 8ஆம் வகுப்புக்குரிய புதிய பாட நூல்களை வழங்கவும் கோருகின்றோம்.

* வரலாற்றுப் பாடநூல்களில் தமிழர்களின் வரலாற்றை மறைத்தும், திரிபுபடுத்தியும் வெளியிட்டு மாணவர்கள் மத்தியில் இன விரோதத்தைத் தூண்டி சமாதான முயற்சிகளை முறியடிக்கும் தேசிய கல்வி நிறுவகத்தினதும், கல்வி வெளியீட்டுச் சபையினதும் இனவாத நோக்கையும் போக்கையும் கண்டித்தும் வரலாற்றுப் பாடநூலை தமிழில் தயாரிக்கும் பொறுப்பை தமிழ் ஆசிரியரிடம் ஒப்படைக்கவும் கோருகின்றோம்.

* இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழ் மொழிமூலக் கல்வி தொடர்பாக கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி நடைமுறைப் படுத்துவதென ஏற்றுக்கொண்ட தீர்மானங்களை ஏட்டுச் சுரக்காயாக வைத்திருக்காமல் அவ்வற்றை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படியும் கோருகின்றோம் - என்று அதில் உள்ளது.

இதற்கிடையில் - அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான 2006 ஆம் ஆண்டு முதலாம் இலக்க சுற்றறிக்கையை மீண்டும் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று கோரி இன்று அரச ஊழியர்கள் ஒருநாள் சுகயீன லீவுப் போராட்டத்தில் குதிக்கவுள்ளமை தெரிந்ததே. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே அதிபர், ஆசிரியர்களும் இன்று சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ)

# வாழைச்சேனையில் நேற்று ஹர்த்தால்

ஏறாவூர்,மார்ச் 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பிரதேசத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை வெள்ளை வானில் வந்த இனம் தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட இரண்டு மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரியே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'கல்குடாப் பிரதேச மாணவர் அமைப்பு' துண்டுப் பிரசுரம் மூலம் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

வாழைச்சேனை - கல்குடா வீதியில் வைத்து திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில், வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும்-தரம் 10 ஐச் சேர்ந்த-15 வயதான இரண்டு மாணவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

ஜெயராஜ் கிருஷாந்த் மற்றும் சுதாகரன் குலோஜன் ஆகியோரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் மற்றும் வாழைச்சேனைப் பொலீஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடத்திச் செல்லப்பட்ட இரண்டு மாணவர்களும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்படும்வரை காலவரையறையற்ற முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் போவதாக கல்குடாப் பிரதேச மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றைய ஹர்த்தால் காரணமாக வாழைச்சேனைப் பிரதேசத்தில் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. வாழைச்சேனை வலயக்கல்வி அலுவலகம், கோட்டக்கல்வி அலுவலகங்கள், ஏனைய அரசாங்க அலுவலகங்கள், அரச வங்கிகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. வாழைச்சேனைப் பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்தும் இடம்பெறவில்லை.

வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. ஆங்காங்கே தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழ்வதைத் தடுக்கும் வகையில் மேலதிக பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். (எ-க-13)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தொடரும் இன ஒடுக்குமுறை சமாதான காலத்திலும்கூட

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்கின்றது தென்னிலங்கை அரசு.

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் - அரசியல் வலிமை - பிரிட்டிஷ் காலனித்துவவாதிகளின் கைகளில் இருந்து, சிங்களப் பெரும்பான்மையினரிடம் கைமாறியது முதல் - கடந்த ஆறு தசாப்த காலமாக - சிங்களப் பேரினவாதம் மேலாண்மை பெற்றதுடன் தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறையும் குரூர வன்முறை வடிவம் எடுத்தது.

கடந்த 58 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய சகல சிங்கள அரசுகளும் தமிழின ஒழிப்புத் திட்டத்துடன் கூடிய ஒடுக்குமுறையை ஒவ்வொரு வடிவங்களில் கட்டவிழ்த்து விட்டதைக் கண்டோம்.

தமிழரின் தேசிய வாழ்வுக்கு ஆதாரமான - அத்தியாவசியமான - அடித்தளங்களைப் படிப்படியாகத் தகர்த்து விடும் நாசகார பேரழிவுத் திட்டங்களாகவே இந்த ஒடுக்குமுறை வடிவங்கள் அமைந்திருந்தன; அமைந்திருக்கின்றன.

ஒன்றுபட்ட ஒரு தேசியக் கட்டமைப்பாக - தனித்துவமான இனமாக - தமிழ் மக்கள் தழைத்து நிற்பதற்கு என்னென்ன அத்தியாவசியமோ - கட்டாயமோ - அந்தக் கட்டுமானங்களை எல்லாம் பல்வேறு மட்டங்களில் தாக்கியழிப்பதை இந்த கொடூர இன ஒடுக்குமுறைப் போக்குத் தனது அடிப்படையாகக் கொண்டிருந்ததை நாம் அனுபவத்தில் கண்டு வருகின்றோம்.

தமிழரின் தனித்துவ இருப்புக்கு மையமான மொழியுரிமை, கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை, பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமை, சமய - பண்பாட்டு வாழ்வுரிமை ஆகியவற்றுக்கு ஊறுவிளைவித்து, அழித்து, தமிழின இருப்பையே இல்லாமல் செய்வதை நோக்கமாகக் கொண்டது இந்தப் பேரினவாதக் கொடூரப் போக்கு.

இந்தப் பேரினவாத அடக்குமுறைக்கும் அவற்றுக்கு எதிரான தமிழரின் ஆயுத எதிர்ப்புக் கிளர்ச்சிக்கும் இடையில் வெடித்த கொடூரப் போரினால் இலங்கைத் தீவில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது.

தமிழினத்துக்கு எதிரான அடக்குமுறையையும், ஒடுக்கு முறையையும், நெருக்குவாரங்களையும் இல்லாமல் செய்து, அவர்களது உரிமைகளை மதித்து, அவர்களுக்கு நீதி செய்யப்படுவதற்கான முயற்சி என்ற பெயரில் - சர்வதேச தரப்பு ஒன்றின் அனுசரணை மத்தியஸ்தத்துடன் - அமைதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

சமாதான எத்தனங்கள் என்ற பெயரில் அந்தச் செயற்பாடுகள் கடந்த நான்கு வருடங்களாக இழுபட - அதற்கு மத்தியிலும் - தமிழின இருப்பை அழிக்கும் பேரினவாதக் கொடூரம் தொடர்கின்றது. தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையை சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்படுவதை திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை விலாவாரியாக அம்பலப்படுத்தியிருக்கின்றது. அதன் விவரம் இப்பக்கத்திலேயே தனியாகத் தரப்பட்டிருக்கின்றது.

எல்லை நிர்ணயம் என்ற பெயரில் தமிழர் தலைநகரில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தைக் குறைக்கச்செய்து அதனைச் சிங்களவர் தேசமாக்கும் முயற்சி தொடர்கின்றது.

தமிழர் பிரதேசத்தில் அரச நியமனங்களை முற்றும் முழுதாகச் சிங்களவர்களுக்கு வழங்கி பேரினவாத மயப்படுத்தும் நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழரின் தாயகப் பூமியைப் பறிக்கும் - சொத்துரிமையை அபகரிக்கும் - எத்தரின் எத்தனம், பல்வேறு சதித் திட்டங்கள் மூலம் அங்கு முன்னெடுக்கப்படுகின்றது. தமிழர் தாயக மண்ணை - பெரிய பிரதேசத்தை - கைத்தொழில் முதலீட்டு வலயம் என்ற பெயரில் சுவீகரித்து - பெரும்பான்மையினரைக் குடியேற்றி கபளீகரம் செய்யும் நடவடிக்கை சத்தம் சந்தடியின்றி நடந்தேறுகின்றது.

பிரதேச அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆக்கிரமிக்கும் செயற்பாடு - சமாதான காலத்தைப் பயன்படுத்தி - முன்னெடுக்கப்படுவதை அம்பலப்படுத்தியிருக்கும் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை, இனிமேலும் இத்தகைய கபடத் திட்டம் தொடரத் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும் எச்சரித்திருக்கின்றது.

இனவாதச் செயற்பாடுகளை மும்முரமாக முன்னெடுத்துக் கொண்டு சமாதானம் பற்றிப் பேசுவதில் எந்தவித அர்த்தமும் இருக்கமுடியாது என்பதையும் பேரவை சுட்டிக் காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆயுத ரீதியான - இராணுவ நடவடிக்கைகள் மூலமான - அடக்குமுறை ஒருபுறம் நிகழ, "பேரினவாதத்தைக் கொண்டு சிறுபான்மை இனங்களின் தனித்துவத்தைச் சிதைத்து, அவற்றின் இருப்பை இல்லாமலாக்கும் கபடத் திட்டம் - சதி நாசவேலை - திட்டமிட்ட வகையில் தென்னிலங்கை அரசால் மற்றொருபுறம் முன்னெடுக்கப்படுவதையே தமிழ் மக்கள் பேரவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

'எமது உரிமைகளைப் பேசிப் பெறமுடியாது. நாமாக அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்' - என்ற தமிழினத்தின் பட்டறிவுப் பாடத்தை மேலும் உறுதிப்படுத்துவனவாகவே இப்போக்குகள் அமைந்திருக்கின்றன. அதுதான் தமிழனத்துக்குள்ள ஒரே வழி போலும்.

# சமாதான காலத்தைப் பயன்படுத்தி திருமலையில் சூழ்ச்சித் திட்டங்கள்

### தமிழ் மக்கள் பேரவை அரச அதிபருக்கு அவசர கடிதம்

திருகோணமலை,மார்ச் 16

சமாதான காலத்தைப் பயன்படுத்தி திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் சூழ்ச்சித் திட்டங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரன் திருமலை மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் கோரி இருக்கிறார்.

அண்மைய நாள்களில் திருமலையில் வழங்கப்பட்ட அரச நியமனங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதை அவர்தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலை பேரினவாதிகளது குப்பைத் தொட்டி அல்ல. சமாதான காலத்தைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகச் செய்யப்படும் சகல சூழ்ச்சிகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

* தேசிய வங்கிகளாகிய இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவற்றில் 43 புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இருவர் மட்டுமே தமிழர். இஸ்லாமியர் எவருமில்லை.

* இலங்கை மின்சார சபையில் 39 புதிய நியமனங்கள் 5 பேர் மட்டுமே தமிழ் பேசும் சமூகத்தவர்.

* தேசிய நீர்வழங்கல் அதிகார சபைக்கு 64 பேர் நியமனம். எவருமே தமிழ் பேசும் மக்களில்லை.

* எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரத்தைக் குறைக்க எடுக்கும் திட்டமிட்ட சதி நடவடிக்கைகள்.

* இராணுவ பாதுகாப்புடன் புதிய சிங்களக் குடியேற்றங்கள்.

* திருகோணமலையின் மாவட்டச் செயலகம் முற்றாகவே சிங்கள மயப்படுத்தப்படுகின்ற நிலைமை. அரசாங்க அதிபர் உட்பட மேலதிக அரச அதிபர் இருவருமே பெரும்பான்மை இனத்தவர். முக்கிய பதவிகளில் திட்டமிட்ட அடிப்படையில் பெரும்பான்மை இனத்தவர் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க அதிபர் அலுவலகத்துள் வழங்கப்படும் சகல நியமனங்களும் பெரும்பான்மை இனத்தவருக்கே சொந்தம்.

* தமிழ் மக்களுக்கு சொந்தமானதும் தமிழ் மக்கள் காலங்காலமாக வாழ்ந்து வருவதுமான கப்பல்துறை, பாலம் போட்டாறு தொடங்கி தம்பலகாமம் வரையுள்ள 1,500 ஏக்கர் நிலப் பரப்பை எந்தச் சட்ட வரையறையுமின்றி இலங்கைத் துறைமுக அதிகார சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்டதாக அறிவித்துக் கைத்தொழில் முதலீட்டு வலயம் என்ற பெயரில் பெரும்பான்மை இனக்குடியேற்றத்தை ஏற்படுத்தும் அமைச்சர் றோகித போஹொல்லாகம அவர்களின் செயற்பாடு.

* துறைமுக அதிகார சபையின் அலுவலகங்களை நகரத்துக்குள் இருந்து பெரும்பான்மை இனத்தவர் செறிந்து வாழும் இடங்களுக்குள் இடமாற்றம் செய்யும் ஜே.வி.பியின் சதிகார நடவடிக்கைகள்.

* நகர மத்தியில் இராணுவக் காவலரண்களுடன் கூடிய புத்தர்சிலை அமைப்பு.

மேற்கூறிய இனவாதச் செயற்பாடுகளைச் செய்துகொண்டு சமாதானம் பற்றிப் பேசுவதில் எந்தவித அர்த்தமும் இருக்கமுடியாது.

தமிழர் தாயகத் தலைநகர் திருகோணமலையை கபளீகரம் செய்யும் நோக்கில் எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளையும் ஸ்ரீ லங்கா அரசும் அமைச்சர்களும் உடன் கைவிடவேண்டும். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆக்கிரமிக்கும் எந்தவொரு செயற்பாடுகளையும் இனிமேல் அனுமதிக்கப்படப் போவதில்லை. அரச நியமனங்கள் யாவும் இனவாத அடிப்படையில் மேற்கொள்ளப்படுமாயின் இது மிகப் பெரிய பிரச்சினையை உருவாக்கும் என எச்சரிக்கின்றோம்.

திருகோணமலையில் எந்த முதலீட்டுத் திட்டமாயினும் அபிவிருத்தித் திட்டமாயினும் தமிழ் பேசும் மக்களின் பூரண சம்மதத்துடன் மட்டுமே நடைபெற வேண்டும். அதை விடுத்து சமாதான காலத்தைப் பயன்படுத்தி அவசர அவசரமாக ஆக்கிரமிப்பு செயற்பாடுகளைச் செய்தால் மிகப்பெரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

சமாதானப் பேச்சுகள் தொடர்ந்து நிலையான சமாதானம் ஒன்று எட்டப்பட்ட பின்பு தமிழ் பேசும் மக்களின் பூரணமான ஒத்துழைப்புடனும், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் மட்டுமே திருகோணமலையில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் மேற்கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் வெளிநாட்டுச் சக்திகளை திருகோணமலையில் கொண்டு வந்து நிலைகொள்ள வைப்பதன் மூலம் பேரினவாத அபிலாஷைகளை நிறைவேற்றி தமிழ் மக்களை மேலும் அடக்கி ஆளலாம் என நினைத்தால் இத்தகைய சதி முயற்சிகளை அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் முறியடிப்பார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமைச்சர்களும் அமைச்சுச் செயலாளர்களும் இனிமேல் திருகோணமலையில் எந்தவொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் செய்யக் கூடாதெனக் கேட்டுக் கொள்வதுடன் திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அவர்கள் இம்மாவட்டத்தின் மூவின மக்களினதும் வாழ்வுரிமையை மனதில் வைத்து தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான எந்தவொரு செயற்பாட்டினையும் செய்வதற்குத் துணைபோகக் கூடாதென சமாதானத்தின் பெயரில் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை வகுப்பறைத் தொகுதிக்கு அடிக்கல்

தென்மராட்சி,மார்ச் 16

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் பல லட்சம் ரூபா செலவில் இரண்டு இரு மாடிக் கட்டட வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன நிறுவனம் ஆரம்பப் பாடசாலைக்குரிய சகல வளங்கள், வசதிகளுடன் இந்தக் கட்டடங்களை அமைக்கவுள்ளது.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று பிற்பகல் 5.30 மணிக்கு அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கென பெரிய அரசடி தாமோதரம் பிள்ளை வீதியில் 40 பரப்புக் காணியினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் கொள்வனவு செய்து வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## நாளை

பங்குனி 03
வெள்ளிக்கிழமை
17.03.2006
திதி : துதியை
முற்பகல் 9.00
நட்சத்திரம் : சித்தரை
பின்னிரவு : 04.33
சுபநேரம் : 06.19 - 07.49
ராகுகாலம் : 10.49 - 12.19
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கடன் கொடுக்காதே வாங்கவும் செய்யாதே. அது பொருள் இழப்புக்கு மட்டுமல்ல நண்பனை இழக்கவும் வழி செய்துவிடும்.

- ஷேக்ஸ்பியர்.


## நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் புதிய அலுவலகம் இலக்கம் 30 மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் வீதியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-204)



## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
19 - 03 - 1930



விண்ணில்
27 - 03 - 2005

**அமரர் வேலுப்பிள்ளை இராமலிங்கம் (V.V.R.)**

(பிரபல வர்த்தகர், உரிமையாளர் ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், நல்லூர் மார்க்கட்)

*உங்கள் ஆத்மா சாந்தியடைய் இறைவனை வேண்டுகின்றோம்.*

இல.2, இராஜ வீதி,
நல்லூர்.
(48117)(26.11.15)
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

**செல்வி கிருஷ்ணதேவி முத்துக்குமாரு**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

காவியம் ஒன்று கண்மூடிவிட்டது
கலையாய் கண்ணியமாய் வலம் வந்து - எம்
பள்ளியின் வளம் தழைக்க
நீரும் நீர் சொரிந்தீர் - இன்று
கண் கலங்க மௌனமாகிவிட்டோம் - நீர்
பரம பதம் நாட....

இந்து மன்றம்
(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).
(சி/48368)(26.11.15)

## மரண அறிவித்தல்கள்



### ஸ்ரீமதி சோமசுந்தரஜயர் - நாகரத்தினம்மா

அராலி மத்தி, வண்ணப்புரம் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கந்தசுவாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சோமசுந்தரஜயர் நாகரத்தினம்மா 13-03-2006 செவ்வாய்க்கிழமை அன்று இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தர ஐயரின் அன்பு மனைவியும், சிவகடாச்சசர்மா (ஓய்வுபெற்ற மாவட்ட தொலைத்தொடர்பு பரிசோதகர்), காலஞ்சென்ற ரெங்கேஸ்வரி அம்மா, ஞானசௌந்தரி அம்மா, ஜெகதாம்பாள், விஜயாம்பாள், அமுதாம்பாள், சிவானந்தசர்மா (மாவட்ட தொலைத் தொடர்பு பரிசோதகர் - திருகோணமலை), சிவராமலிங்கசர்மா (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயும், சிவசுப்பிரமணிய குருக்களின் (அராலி சிவன்கோயில்) அன்புத் தமக்கையும் வெங்கடேஷ் ஐயர் (இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்), லலிதாம்பாள் ஆகியோரின் அன்புமிகு சிறிய தாயும், சர்வேஸ்வரி, கிருஷ்ணசாமிக்குருக்கள், சிவசுப்பிரமணியக்குருக்கள் (ஞானியார்கோயில் அராலி), நடராஜக்குருக்கள் (நாச்சிமார் கோயில்), சிவகணேசக்குருக்கள் (நல்லூர்), ஸ்ரீ கோபாலக்குருக்கள் (அராலி) ஆகியோரின் அன்பு மாமியும், சிவசுதசர்மா, கனகலதா, விஜயலதா, சுந்தரேஸ்வர சர்மா, சுபாகரசர்மா, தேவமனோகரி (பொதுமுகாமைத்துவ உதவியாளர், சங்கானை), ஜெயதுர்க்கா (யாழ்.பல்கலைக்கழகம்), திரிலோகநாயகி, வித்தியா, நிமல், சியாமளாதேவி, சியாமளாவதனா, கணேசராஜசர்மா, சியாமளாரூபி, ஸ்கந்தசிவரூபசர்மா, சியாமளா ஜெனனி, கேதாரணி, திகாரினி, பத்மலோஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-03-2006) வெள்ளிக்கிழமை 75/10, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் (நல்லூர் தெற்குவீதி) எனும் முகவரியிலுள்ள இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*75/10, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(48113)(26.11.15)
தகவல்:
பிள்ளைகள்.

### முடியப்பு - பிரான்சிஸ்க்கா



கரம்பனைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முடியப்பு - பிரான்சிஸ்க்கா அவர்கள் 14-03-2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முடியப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரானிஸ்லோஸ், டேவிற், பவுலின், அஞ்சலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மேரி ஸ்ரெலா, எட்வேட், பற்றிமா, கேபேட், அல்பேட், அல்வீனா (கனடா), சந்திரா, தாசன் (ஜேர்மனி), குமார், சித்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சாந்தி, குணானந்தம், இராணி, இராசாத்தி, ஜேசுதாசன் வேந்தா, யமுனா, லவி, சாள்ஸ் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெறி, றீகன், கொன்சி, கொன்சன், வினோ, வினோதினி, ஜோன்சன், றூபினா, விலீசன், வின்சன், ஜென்சிக்கா, மைக்ஸி, றொக்கி, லியோன், ஜென்னர், அனஸ்ரீன், லிபேட்சன் கீதன், ஸ்ரனிஸ்ரன், மெடிலின், தங்கா, ஜெறோ, கறோலின், கத்தறின், வினி, நிக்ஷன், குட்டி, தங்கா, டெனி, மான்ஸி, ஜெறோணா, றோசி, நிறோஜா, அன்ரன், ஜெனா, சீனு, ஸ்ரோஸி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலாவத்தை,
முல்லைத்தீவு.
(48102)(26.11.15)
தகவல்:
முடியப்பு சந்திரா (மகள்).

## ஆலயத் தீர்த்தத்தின் சுற்றுமதில் உடைப்பு

தொல்புரம், மார்ச்16

தொல்புரம், பத்தானையம்பதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் தீர்த்தத் தடாகச் சுற்று மதில் விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது. கடந்த 6 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத் தீர்த்தத் தடாக மதிலை அடித்து உடைத்ததோடு, உடைந்த மதிலின் இடிபாடுகளைத் தீர்த்தத் தடாகத்திற்குள் கொட்டியுள்ளனர். அத்துடன், கழிவுப்பொருள்களையும் கொட்டி அசுத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-119-204)

## மிளகாய் பயிர்களில் குருமன் நோய்

வலி.தென்மேற்கு, மார்ச்16

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட மிளகாய் செய்கை குருமன் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. மிளகாய்க் கன்றுகளில் குருத்துகள் சுருண்டு அவற்றின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு கிருமிநாசினி தெளிக்கும் பணியில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. (ஐ-135)

## மாதாந்த உதவிப் பணம்

வலி.தென்மேற்கு, மார்ச்16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவு அந்தந்தத் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவில் சமூகசேவைத் திணைக்களத்தின் மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவைப் பெற்றுவரும் புற்றுநோயாளர்கள், தொழுநோயாளர்கள் மற்றும் காசநோயாளர்கள் ஆகியோரும், இக்கொடுப்பனவைத் தமக்குரிய தபாலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## மீண்டும் சிற்றூழியர்களுக்கு நேர்முகப் பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கான சிற்றூழியர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம், 22 ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தவிர்க்க முடியாத காரணத்தால் சமுகமளிக்காதோருக்காக மட்டுமே மேற்குறிப்பிட்ட திகதிகளில் 'சுதேச மருத்துவ திணைக்களம், கப்பல்துறை, திருகோணமலை' என்னும் இடத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.தர்மராஜா அறிவித்துள்ளார். (ஐ-202)

## மெய்வன்மைப் போட்டி

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை அதிபர் க.ஹரிஹரசக்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற கணிதபாட ஆசிரிய ஆலோசகர் (வலிகாமம் கல்வி வலயம்) க.நடாராசா, இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.மேற்கு பிரிவு தலைவர் தி.உதயசூரியன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஐ-135)

## கண்ணீர் அ[illegible]ஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் வி.திருச்செல்வம் அவர்களின் அன்புச் சகோதரி

**மனோன்மணி விநாசித்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, நல்லூர்.
(48118)
(26.11.15)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 - 05 - 1946



மறைவு
02 - 03 - 2004

அமரர்

**இராமசாமி விஜயரத்தினம்**

*(முன்னாள் பீடாபதியும், விவசாய எந்திரவியல் துறைத் தலைவரும், யாழ்.பல்கலைக்கழகம்.)*

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
திகழ்ந்து கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்திடும்
தந்தையே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு யுகமே கழிந்தாலும்
உங்கள் நினைவு எம் மனதில் என்றும்பசுமையாய் துளிர்க்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இன்றும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்*

Mrs.V.NATHAN,
97, THE DRIVE,HOUNSLOW,
MIDDLESEX, TW 3 IPW U.K.
T.P.: 02085600975. (48116) (39.26.11.15)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், பாசம் மறவாத
சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.




எப்பொழுதும் தொழில்நுட்பத்துறையில் முன்னணி வகித்துவருகின்றது. அந்தவகையில் டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கையில் முதன்முறையாக அறிமுகமான உலக முதல்தர துரித கதியில் பிரதியாக்கம் செய்யக்கூடிய FRONTIER - 570 என்னும் இயந்திரத்தைக் கொழும்பில் சென்ற ஆண்டு அறிமுகம் செய்த நாம் இப்பொழுது அதே தொழில்நுட்பத்துடன் கூடிய FRONTIER - 570 என்ற இயந்திரத்தை யாழ். நகரில் முதன்முறையாக அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதில் புகைப்படச்சுருள், FLOPPY, CD, MO DISK, ZIP ஆகியவற்றில் இருந்து துரித கதியில் 3R முதல் 12x18 அளவு வரை தேவைக்கேற்ற அளவுகளில் சிறந்த முறையில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மூலம் பிரதியாக்கம் செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம்:

ரவி டிஜிட்டல் கலர் லாப் அன்ட் சுப்பஸோ விடியோ ஓடியோ சென்ரர்

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2082



வஸந்த பண்டிகை எனப்படும் 'ஹோலி பண்டிகை' இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. நேற்றுமுன்தினம் டில்லியில் வர்ணக் கலவைகளைப் பூசிக்கொண்டு பண்டிகையைக் கொண்டாடிக் குதூகலித்த பெண்களையே படத்தில் காண்கிறீர்கள். (ஐ)

# மகாராஷ்டிராவில் மீண்டும் பறவைக்காய்ச்சல் பீதி!

டில்லி,மார்ச்16

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நான்கு பகுதிகளில் மீண்டும் பறவைக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அது பரவுவதைத் தடுக்க 75 ஆயிரம் பறவைகளைக் கொல்ல உத்தரவிடப் பட்டுள்ளது.

மகாராஷ்டிரத்தில் நவப்பூர் என்ற இடத்தில் அண்மையில் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளது. அண்டை மாநிலமான குஜராத்தின் சில பகுதிகளிலும் நோயின் தாக்கம் இருந்தது

நோய் மேலும் பரவாமல் தடுக்க ஆயிரக்கணக்கான கோழிகள் அழிக்கப்பட்டன. நாடு முழுவதும் ஏற்பட்ட பறவைக்காய்ச்சல் பீதியால் கோழி இறைச்சி விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

அரசின் 'சிக்கன் மேளா' உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மூலம் பறவைக்காய்ச்சல் பீதி மெல்ல மறையத் தொடங்கியுள்ளது.

இதனிடையே மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்தின் சில பகுதிகளிலிருந்தும் கொண்டு வரப் பட்ட பறவைகளின் மாதிரிகள் போபாலில் உள்ள ஆய்வுக் கூடத்தில் சோதிக்கப்பட்டு வந்தது.

ஆய்வு முடிவில் மகாராஷ்டிரத்தின் ஜல்காவோன் மாவட்டத்தின் நான்கு கிராமங்களில் மீண்டும் பறவைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (ஐ)

# அமெரிக்காவுடன் ஏற்படுத்திய நட்புறவு பாவச்செயல் அல்ல என்கிறார் மன்மோகன்

புதுடில்லி,மார்ச்16

''அமெரிக்காவுடன் இந்தியா புதிய நட்புறவை ஏற்படுத்திக்கொண்டிருப்பது வருத்தப்பட வேண்டிய பாவச் செயல் அல்ல.

அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டதாலே இந்தியா சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தனது உரிமையை அந்நாட்டிடம் அடகுவைத்து விடவில்லை - இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவுடன் கொண்ட உறவால், நம் நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்குப் புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் விளக்கினார்.

வெளியுறவு அமைச்சகத்தின் செயற்பாடுகள் குறித்த விவாதம் மாநிலங்களவையில் நடைபெற்றது. அப்போது இடது சாரிக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பிரதமர் கூறியதாவது:-

உலக வல்லரசு நாடு அமெரிக்கா. அதனுடன் நட்புறவு ஏற்படுத்திக்கொள்வதால் கிடைக்கும் வாய்ப்புகளை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவின் நலனைக் கருத்தில்கொண்டே அதனுடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம்.



இந்தப் பிராந்தியத்தில் எந்த நாட்டிலும் (ஈரான்) ஆட்சியை மாற்றும் முயற்சியில் இந்தியா தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை.

இந்திய - சீன எல்லைப் பிரச்சினையில் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு தீர்வு ஏற்படும் என நம்புகிறேன். இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு வரவிருக்கிறார் சீன அதிபர் ஹு ஜிந்தாவோ- இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். (ஐ)

# 'போவார்ட் பிளாக்' கட்சியும் உடைவு ஓர் அணி அ.தி.மு.கவில் இணைந்தது

சென்னை,மார்ச்16

தமிழக சட்டசபைத் தேர்தலை ஒட்டி இடம்பெற்றுவரும் கூட்டணிகள் வரிசையில் 'போவார்ட் பிளாக்' கட்சி இரண்டாக உடைந்து விட்டது. அதில் ஓர் அணியினர் அ.தி. மு.கவுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டனர்.

தி.மு.க. கூட்டணியை வலுவிழக்கச் செய்யும் ஆளுங்கட்சியின் முயற்சியின் மற்றொரு வெற்றியாக போர்வேட் பிளாக் கட்சியும் உடைந்துள்ளது. சந்தானம் தலைமையில் உடைந்த போர்வார்ட் பிளாக் கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கி அதற்கு அ.தி.மு.க. அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் மூலம் எதிரணியில் உடையாதது தி.மு.க. மட்டுமே என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் களத்தில் தனித்து நின்ற அ.தி.மு.க. எதிரே உள்ள தி.மு.க. தலைமையிலான ஏழு கட்சி கூட்டணியை உடைப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் கடந்த சில மாதங்களாகவே ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் கட்சியின் மூத்ததலைவர்களில் ஒருவரான திண்டிவனம் ராமமூர்த்தி, தி.மு.க. கூட்டணியில் வன்னியர்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்று முதல் குரல் கொடுத்து உடைப்பு முயற்சிக்கு விதை விதைத்தார்.

அவருக்கு எதிர்ப்புக் கிளம்பி கடைசியாகக் கட்சியை விட்டு நீக்கப்பட்டார். தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கி அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் தொழிற்சங்க பிரிவான ஐ.என்.டி.யு.சி. பிளவுபட்டுள்ளது. காங்கிரஸ் க்ட்சி, தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்தாலும் காளன் தலைமையிலான ஐ.என்.டி.யு.சி. ஆளுங்கட்சியுடன் கூட்டணி அமைத்து இரண்டு தொகுதிகளைப் பெற்றுள்ளது.

பா.ம.கவை உடைக்கும் முயற்சி நீண்ட காலத்திற்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது. பா.ம.கவைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களான சிவகாமி, முருகவேல்ராஜன் ஆகியோர் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு அ.தி.மு.கவில் இணைந்தனர். அவர்களைத் தொடர்ந்து மற்றொரு தலித் எம்.எல்.ஏவான கிருஷ்ணனும் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு அ.தி.மு.கவில் இணைந்தார். பா.ம.கவை எதிர்த்து அரசியல் நடத்திவரும் இயக்கங்களுக்கும் அ.தி.மு.கவில் அடைக்கலம் கொடுக்கப்பட்டுள்ளதன் மூலம் பா.ம.கவை வலுவிழக்கச் செய்யும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

# தமிழகத்தில் ரயில்களுக்குப் பாதுகாப்பு

சென்னை,மார்ச்16

சென்னை மத்திய ரயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரயில் நிலையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவின் ஜர்க்கண்ட மாநிலத்தில் ஹேயகரா - குமுதி ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையே சென்றுகொண்டிருந்த பயணிகள் ரயில் தீவிரவாதிகளால் கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்டதையடுத்து ஆந்திரம் மற்றும் தமிழகத்திலும் ரயில்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# வாக்காளர்களுக்குப் பரிசுப்பொருள் வழங்கினால் கடும் நடவடிக்கை

## தலைமைத் தேர்தல் அதிகாரி எச்சரிக்கை

சென்னை, மார்ச் 16

தமிழகத்தில் வாக்காளர்களுக்குப் பரிசுகள் மற்றும் இலவசப் பொருள்களை வழங்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா எச்சரித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியதாவது:-

தமிழக அமைச்சர் ஒருவர் இலவசமாக தையல் இயந்திரங்களை வழங்கியதாக தொலைபேசி மூலம் புகார் செய்யப்பட்டது. இது குறித்து விசாரிக்க மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்களுக்குப் பரிசுகள், வேஷ்டி, சேலைகள் உட்பட இலவசப் பொருள்களை அரசு, அமைப்புகள் அல்லது தனிநபர் வழங்குவது தேர்தல் நடத்தை விதிகளை மீறுவதாகும்.

இது குறித்து தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்கும்.

பி.எஸ்.என்.எல் நிறுவனம் தனது சந்தாதாரர்களுக்கு வழங்கிய கட்டண 'ரசீதில்' குறிப்பிட்ட ஒரு கட்சியின் தலைவர் படம் அச்சிடப் பட்டுள்ளது குறித்து புகார் செய்யப்பட்டது.

பி.எஸ்.என்.எல் நிறுவனத்திடம் இது குறித்து விளக்கம் தருமாறு தேர்தல் ஆணையம் கோரியது-என்றார் (ஐ)

## இந்தியச் செய்திகள்





இந்தியாவின் ஜர்க்கண்ட மாநிலத்தில் தீவிரவாதிகளால் நடுக்காட்டில் வைத்துக் கடத்தப்பட்ட பயணிகள் ரயில் வண்டியில் இராணுவத்தினர் பிரவேசிப்பதையும் ரயிலில் இருந்து பயணிகள் பத்திரமாக வெளியேற்றப்படுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

# பதற்றம் நிறைந்த தொகுதிகளில் வீடியோ கண்காணிப்பு

சென்னை,மார்ச்16

பதற்றம் நிறைந்த தொகுதிகளில் வீடியோக் கமரா மூலம் தீவிர கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்ய தமிழக தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து, தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆளுநர் மாளிகையில் நடந்த இக்கூட்டத்தில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா, இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

# யாழ்.மாநகரசபையின் நிதி நிலைமை பருமோசமான கட்டத்தில் உள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்.மாநகர சபையில் கடந்த ஆண்டுக்கான சம்பளக் கொடுப்பனவிற்கு எதிரான மீளளிப்பில் நான்கு கோடி 83 லட்சத்து 65 ஆயிரத்து 530 ரூபா பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் சபையின் நிதிநிலைமை இல்லை.- இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார் யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம்.

சம்பளக் கொடுப்பனவு மீளளிப்பு மற்றும் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக மாநகர சபை ஆணையாளரால் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்திலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2005ஆம் ஆண்டிற்கான சம்பளக் கொடுப்பனவு கட்டு நிதி மீளளிப்புத் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு எம்மால் எழுதப்பட்ட (17-02-2006 ஆம் திகதிய) கடிதத்தின் நிழற்பிரதி ஒன்று தங்கள் தகவலுக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றது.

இதன்படி, 2005ஆம் ஆண்டிற்கான சம்பளக் கொடுப்பனவிற்கு எதிரான மீளளிப்பில் ரூபா 4 கோடி83இலட்சத்து 65ஆயிரத்து 530 ரூபா-பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறான ஒரு பாரிய தொகை பற்றாக் குறையைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இச்சபையின் நிதிநிலைமை இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பற்றாக் குறையான நிதி, சபையின் செல்மதிகள் மற்றும் வைப்புப் பணங்கள் போன்ற நம்பிக்கை நிதியங்களை விழுங்கியுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

சபையின் 2004ஆம் ஆண்டிற்கான ஐந்தொகையைப் பார்க்கும் பொழுது, திரண்ட நிதி **Accumulated Municipal Fund** ரூபா. 5 கோடி 31லட்சத்து 92ஆயிரத்தி 641ரூபா-ஆகக்காணப்படுகிறது. இது வருமான கடனாளி வருமதியான ரூபா 4கோடி83லட்சத்து 60ஆயிரத்தி 900/- ஐ உள்ளடக்கியதாகும். இந்தத் தொகையில் ஆதனவரி நிலு வைகள் மட்டும் ரூபா.3 கோடி17 லட்சத்து 4ஆயிரத்தி 902/- எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆதன வரி நிலுவையில் இருபத்தைந்து வீதமாவது அறவிடப்படக்கூடுமா என்பது சந்தேகத்திற்குரியது.

எனவே, 2005 ஆம் ஆண்டு முடிவில் உண்மை நிதிநிலைமையைப் பார்த்தால், சபை பாரிய நிதி நெருக்கடியில் உள்ளதைக் காணலாம். எனக்கு எட்டிய தகவலின்படி இந்த விடயம் இதுவரை ஆய்வு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், இந்தச் சபையின் நிதிக் கட்டுப்பாடு போதிய அளவு இருந்திருக்கவில்லை என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். உதாரணமாக அண்மைக்காலத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட 95 பேரையும், இன்னும் வழங்கவேண்டி இருக்கின்ற 60 பேருக்கு மேற்பட்டவர்கள் பற்றியும் சிந்தித்தால், இந்த நியமனங்கள் ஆளணி அங்கீகாரத்திற்குப் புறம்பாக அல்லது அதனைப் பின்பற்றாது மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் என்று கருதலாம்.

சில தனிச் செலவுகள் சபையின் நிதியில் ஒரு தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தும். ஆனால், நியமனங்கள் போன்றவை நீடித்த நீண்டகால நிதித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். நியமனங்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளுக்குப் புறம்பாக நியமனங்கள் மேற்கொள்ளப்படும் பொழுது இறுக்கமான நடவடிக்கை உடனடியாகவே எடுக்கப்பட்டிருந்தால் இவ்வாறான ஒரு பாரிய இக்கட்டில் சபையின் நிதி நிலைமை மாட்டியிருக்கமுடியாது என்று கருதுகின்றேன். குறிப்பாக, விதிகளுக்கு மாறான நியமனங்கள் அல்லது கொடுப்பனவுகள் செய்யும் பொழுது, மாகாணசபை எடுக்கின்ற பல்வேறு நிர்வாக நடவடிக்கைகளும், அதற்கும் மேலாகக் கணக்காய்வாளர் நாயகம் மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 226ஆம் பிரிவின் கீழ் அந்தந்த நியமனங்களுக்கான செலவினங்களை அறவிட **Surcharge** நடவடிக்கை உடனுக்குடன் மேற்கொண்டிருந்தால் இவ்வாறான தாக்கங்கள் ஏற்படவாய்ப்பு குறைவாக இருந்திருக்கும்.

முழுச்சம்பளக் கொடுப்பனவுகளை மாகாணசபை மீளளிக்கும்போது பிரச்சினை எழாது எனினும் 2005ஆம் ஆண்டு போல குறைந்த வீதத்தை மீளளிக்கும் போதுதான் பிரச்சினைகள் எழுகின்றன. இவ்வாறான நிலைகளை எதிர்பார்த்தே நியமனங்கள் போன்றவை செய்யப்படுவது கடுமையாக உறுதிசெய்யப்படல்வேண்டும்.

மேலும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக காலந்தாழ்த்தி ஐயவினாக்கள் எழுப்புவதில் எந்தவிதமான அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. இவற்றுக்கு உடனடியாகத் துரிதமான-காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். எடுக்கவும் வேண்டும் என்ற பொதுக்கருத்தையும் முன்வைக்க விரும்புகின்றேன். இவை இனியாவது பின்பற்றப்படும் எனத் திடமாக நம்புகின்றேன்.

இவ்விடயங்களுக்குத் தங்களதும், மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சினதும், உள்ளூராட்சி ஆணையாளரதும் கணக்காய்வாளர் நாயகத்தினதும் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்- என்றுள்ளது.

(ஐ-202)

## தவக்காலச் சிந்தனை 16

### வாழும்போதே வளங்களைப் பகிர்வோம்

சுகபோகங்களை அனுபவித்துவந்த செல்வந்தரின் வீட்டுவாசலில் குஸ்ரரோகத்தால் பீடிக்கப்பட்ட லாசர் என்னும் ஏழை இருந்தான். செல்வருடைய உணவு மேசையில் இருந்து விழும் சிறு துண்டுகளால் தமதுபசியாற்றி வந்தார். இருவரும் இறந்தனர். ஏழை விண்ணக மகிமையிலும் செல்வர் நரக நெருப்பிலும் சேர்க்கப்பட்டனர்.

'ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பாவர்' (எரே 17:7)

இவ்வுலகில் இறைவனில் நம்பிக்கை கொள்ளாது சுகமாக, மனம்போன போக்கில் வாழ முற்பட்டால் மறு உலகு எதிர்மாறாக இருக்கும். துன்பங்கள், வறுமை, நோய்களால் வாடுவோரை ஏற்றுக்கொண்டு உதவமுற்பட்டால் மறுவாழ்வை மகிமையுள்ளதாக இறைவன் வழங்குவார்.

கிடைத்தற்கரிய மனிதப்பிறப்பிலே அளவுக்கு அதிகமாகச் சேர்த்து வைத்துப் பழிகூறுவதை நிறுத்துவோம். திடீரென நாம் இறக்க நேரிட்டால் அந்தச் செல்வங்கள் யாருக்குப் பயன்பெறும்?

எனவே, வாழும்போதே இறைவன் தந்த உலக செல்வங்களை இல்லாதோருடன் பகிர்ந்து வாழ்வோம். அப்போது வானக செல்வத்தை கடவுள் அனைவருக்கும் சமமாக அளிப்பார் என நம்புவோம். நிலையில்லாச் செல்வங்களைக் கொண்டு நிலையான மனித நேயத்தைக் கட்டி எழுப்புவோம்.

- எஸ்.யேசுதாஸ், *கொழும்புத்துறை.*

## உளநலச் சங்கம்

**வருடாந்தப் பொதுக்கூட்ட அழைப்பு**

*காலம்: 18.03.2006 சனிக்கிழமை பி.ப.4 மணி [புதிய நேரம்]*
*இடம்: மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை*
*தலைமை: திரு.ந.கனகரட்ணம் [தலைவர்]*

*வருடாந்த நிதி, செயற்பாட்டறிக்கைகள் சமர்ப்பித்தலுடன் புதிய நிர்வாகசபை தெரிவும் இடம்பெறும். அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

**திரு.ந.கனகரட்ணம்,** *தலைவர்.*
**சோ.இராசேந்திரன்,** *உபசெயலாளர்.*

(48057)(26.16.45)

(குறிப்பு- சங்க அங்கத்தவர்களுக்கு மட்டுமான அழைப்பு)

## சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையம் சார்ந்த 120 குடும்பங்களில் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பு போஷாக்கு உணவுகளை வழங்கியது. பாரதி மன்ற சனசமூக நிலையத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் கி.சிவசுப்பிரமணியம் போஷாக்கு உணவுப் பொதிகளைக் கையளித்தார். (ஐ-111)

## பன்னாலையில் 10 வீடுகள் அமைப்பு

வலி.கிழக்கு,மார்ச் 16

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுப்பிட்டி கிழக்கு பன்னாலை பகுதியில் 10 வீடுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அமைத்து கொடுக்கப்படவுள்ளன.

வசதியற்ற குடும்பங்களைத் தெரிவு செய்து அவற்றில் முதற்கட்டமக 10 குடும்பங்களுக்கு ஒருலட்ச ரூபா செலவில் இந்த வீடுகளை அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வீடுகளை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வலி.கிழக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தெரிவித்தார். (ஐ-180)

## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03 இல் ஆள்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 19.03.2006 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணி வரை கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

**மனித வள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி/48256)(42-16-45-26)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 08 - 1950



மறைவு 07 - 03 - 2004

**அமரர் இரத்தினம் சிவம்**

(யாழ்/பல்கலைக்கழக ஊழியர்)

*அன்போடு அரவணைத்து அறிவோடும்*
*பண்போடும் எமக்கு வழிகாட்டி*
*தானத்திலே சிறந்த கல்வித்தானத்தை*
*-எமக்கூட்டி*

*எம்மை ஆளாக்கி வைத்த*
*அன்புத் தெய்வமே!*
*ஆண்டிரண்டு ஆனாலும் ஆறாது*
*தவிக்கின்றோம் நாமிங்கே*

தம்பாலை, அச்சுவேலி.

(48076)(26.16.45)

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 18 - 05 - 1927



இறப்பு 14 - 02 - 2006

**அமரர் கதிரவேற்பிள்ளை தனபாலசிங்கம்**

*அப்பா! அப்பா!! எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தீரே*
*இனி அப்பா என்று யாரை அழைப்பேன்*
*உனது உடல் அழிந்தாலும் உயிர் அழியாது*
*என்னுடன் இருந்து எனக்கருள் புருவீர்*

இன்று(16-03-2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவச்சியோல்லை,
துன்னாலை வடக்கு, கரவெட்டி. (48072)(26.16.45) த.சத்தியரூபி *(மகள்).*

**CROWN**
STAINLESS STEEL KITCHEN SINK

எமது நாட்டில்----------
அதி கூடிய அளவில் விற்பனையாகும் கிட்சன் சிங்க்




ஏக விநியோகஸ்தர்கள்
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்)லிமிட்டட்
காட்சியறை : 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ் : 2446554
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப் பொருள்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# கரைச்சிக் கோட்ட மட்ட சதுரங்கப் போட்டியில் வட்டக்கச்சி ம.வி. 3 பிரிவுகளில் சம்பியன்

வட்டக்கச்சி,மார்ச்16

கரைச்சிக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வட்டக்கச்சி மகா வித்தியாலயம் 3 பிரிவுகளில் சம்பியனாகியது.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 4 பிரிவுகளாக இப்போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**15 வயது பிரிவு - ஆண்கள்**

வட்டக்கச்சி ம.வி., இராமநாதபுரம் ம. வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**பெண்கள்**

வட்டக்கச்சி ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி, இராமநாதபுரம் ம.வி.

**19 வயது பிரிவு - ஆண்கள்**

இராமநாதபுரம் ம.வி., கிளிநொச்சி ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**பெண்கள்**

வட்டக்கச்சி ம.வி., இராமநாதபுரம் ம.வி. கிளிநொச்சி மத்திய கல்லூரி.

இப்போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளன. (3-405)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திவரும் லீக் முறையிலான ஆண், பெண் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகக் கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

✱ பிற்பகல் 3.30 மணி - பெண்கள் பிரிவு - கோப்பாய் வி.க. எதிர் பமிலியன்ஸ் (வெள்ளை) வி.க.

✱ பிற்பகல் 4.30 மணி - ஆண்கள் பிரிவு ஜொலிஸ்ரார் வி.க. எதிர் உடுவில் வி.க. (3-190)

## பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டுக்கழகம் மக்கள் வங்கியின் வட வலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் பூப்பந்தாட்டத் திறந்த போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என்று போட்டிக் குழுவின் தலைவர் எஸ்.மோகன் தெரிவித்துள்ளார். (3-190)

## மெய்வன்மைப் போட்டிகள்

செம்பியன்பற்று,மார்ச்16

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அதிபர் பொ.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (3-36)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், மார்ச்16

யாழ். கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன என யாழ். கோட்டப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா தெரிவித்துள்ளார். (3-190)

✱ ✱ ✱

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பாடசாலையின் மாணிக்கம் பாக்கியம் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.தனபாலசிங்கம் கலந்துகொள்வார். (3-202)





வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் கனகராயன்குளம் பிரதேசப் பொறுப்பாளர் முல்லைமணி தேசியக் கொடியேற்றுவதை முதலாவது படத்திலும் - போட்டியில் பங்குபற்றுவதற்குத் தயாராகவுள்ள அணி வீர, வீராங்கனைகள் அணிவகுத்து நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: புளியங்குளம் செய்தியாளர்)

# புதுக்குடியிருப்புக் கோட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு,மார்ச்16

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டமட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் அண்மையில் விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜீ.எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழக இணைப்பாளர் எஸ்.இரத்தினசிங்கம் ஏற்றினார்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:-

**தரம் 9இற்கு மேற்பட்ட பிரிவு**

ஆண்கள் - புதுக்குடியிருப்பு றோ.க. வித்தி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வள்ளிபுனம் க.உ. வித்தி.

பெண்கள் - வள்ளிபுனம் க.உ. வித்தி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, விசுவமடு ம.வி.

**தரம் 9இற்கு கீழ்ப்பட்ட பிரிவு**

ஆண்கள் - சிறிசுப்பிரமணிய வித்தி., தேராவில் தமிழ் வித்தி.

பெண்கள் - குரவில் தமிழ் வித்தி., சிறிசுப்பிரமணிய வித்தி., தேராவில் தமிழ் வித்தி. (3-353-202)

## சைக்கிள் ஓட்டம்

வலி.மேற்கு,மார்ச்16

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மரதன் சைக்கிளோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளில் பங்குபற்றவுள்ளவர்களை உடனடியாகப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் பெயர் விவரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இருபாலாரும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றமுடியும். வெற்றிபெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வலி. மேற்குப் பிரதேச மட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இறுதி விளையாட்டுப் போட்டியில் வைத்து வழங்கப்படும். (3-175)

# மாட்டுவண்டிச் சவாரியில் வெற்றிபெற்றோரின் விவரம்

பரந்தன்,மார்ச்16

கிளிநொச்சி, கோணாவில், யூனியன்குளம் வானதாரகை விளையாட்டுக் கழகத்தால் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி அக்கராயன் விளையாட்டுத் திடலில் கடந்த வாரம் வானதாரகை விளையாட்டுக் கழகத்தலைவர் தி.தர்மராசா தலைமையில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சிறி ஏற்றிவைத்தார்.

அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:

**'அ' பிரிவு**

யதுசன் - வவுனிக்குளம், நியூட்டன் - இளவாலை, கிருஸ்ணகுமார் - அக்கராயன்குளம்.

**'ஆ' பிரிவு**

லிகேதன் - அக்கராயன்குளம், நகுலேந்திரன் - 3ஆம் வாய்க்கால், சிறிதரன் - பூநகரி.

**'இ' பிரிவு**

மகிந்தன் - பாண்டியன்குளம், சதீஸ்குமார் - கள்ளப்பாடு, ஆஞ்சலோ - பூநகரி.

**'ஈ' பிரிவு**

அருள்செல்வன் - வட்டக்கச்சி, யதுசன் - ஸ்கந்தபுரம், நிருபன் - முரசுமோட்டை. (3-352)



அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. போட்டிகளுக்கு விருந்தினர்களாக வருகைதந்த பிரமுகர்களைக் கல்லூரியின் மாணவத் தலைவி செல்வி து.சோனியா கைலாகுகொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.குமாரசுவாமி, கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தம், கல்லூரியின் பழைய மாணவியும் கல்வி வழிகாட்டல் பொறுப்பதிகாரியுமான அருட்சகோதரி மேரி திரேஸ்ராணி, அச்சுவேலிப் பங்குத்தந்தை பி.சோதிநாதன், கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரியமொசாறியோ ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)




# வன்னியில் சிறப்புற நடந்த மெய்வன்மைப் போட்டிகள்

கிளிநொச்சி, மார்ச்.16

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சிறப்புற இடம்பெற்றன. கல்லூரி முதல்வர் எஸ்.இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (3-203)

✱ ✱ ✱

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலாளர் சுலோஜினி கலந்துகொண்டார். (3-203)

✱ ✱ ✱

கிளிநொச்சி ஐயனார்புரம் பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றன. பாடசாலை முதல்வர் ஐ.இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சின்னராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (3-203)

✱ ✱ ✱

வட்டக்கச்சி,மார்ச்16

வட்டக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் ஆ.உதயணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் பிரதம விருந்தினராகவும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த கனிச்செல்வி கௌரவவிருந்தினராகவும் கலந்துகொண்டனர். (3-405-203)

✱ ✱ ✱

பரந்தன்,மார்ச்16

இராமநாதபுரம் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

சிறுவர்களுக்கான போட்டிகள் ஒருநாளும் பெரியவர்களுக்கான போட்டிகள் மறுநாளும் நடைபெற்றன. பாடசாலை முதல்வர் இ.ரஷ்ணுகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நிபுணத்துவ ஆலோசகர் க.கந்தசாமி கலந்துகொண்டார். (3-352-203)

✱ ✱ ✱

பரந்தன்,மார்ச்16

முழங்காவில் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி கருணாகரன் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளை கலந்துகொண்டனர். (3-323-203)

✱ ✱ ✱

பரந்தன்,மார்ச்16

பன்னங்கண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் ப.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன் கலந்துகொண்டார். (3-352-203)

# சாயி சிந்தனை



## நான் யார் என்பதற்குப் பதில்காணும் வரை சாதனை தொடரவேண்டும்

பஜனை,பூஜை, தியானம் இவை யாவும் மனதை ஒருமுகப்படுத்தும் தற்காலிக வழிமுறைகளேயன்றி நிரந்தரமான இலட்சியத்தைப் பெற்றுத்தர வல்லவையாகமாட்டா. 'நான் யார்' 'நான் யார்' என்று கேட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். இதற்குப் பதில் காணும் வரை சாதனை தொடரவேண்டும். என் உடல், என்மனது, என் புத்தி, என் உடைமை என்று கூறிக்கொண்டே போனால் 'நான்' என்பது 'எது' என்று தேடுவதில் நாட்டம் அதிகமாகும். இவையாவும் இந்தத் தேகத்தைக் குறிப்பவையே. அப்படியானால் அந்த உண்மையான 'நான்' என்பது எது? தேகம் ஜடம், ஜடப்பொருள். எப்படி இது சாசுவதமான பொருளை உணரமுடியும்? தன்னை எவராவது நிந்தித்தாலும் திட்டினாலும் அல்லது போற்றினாலும் அது யாரைக் குறிப்பிடுகிறது என்று ஆராய்ந்து பார்த்தால் அது தேகத்திற்கேயல்லவா உரியது. இதனால் பாதிக்கப்படவேண்டியது தேகமே. அந்தத் தேகத்திற்குரியது 'நான்' அல்ல என்று விவேகத்துடன் வாதிக்க வேண்டும். ஆகவே இந்த நிந்தனையும் பாராட்டும் தன்னை எவ்வகையிலும் பாதிக்காது என்ற பக்குவம் பெறவேண்டும். தேகம் எப்படி மற்றொரு தேகத்தை தூஷிக்க முடியும்? இது சாத்தியமற்றதல்லவா? ஆத்மா மற்றொரு ஆத்மாவைத் தூஷிக்குமா? இது சாத்தியமேயில்லை. ஏனெனில் ஆத்மா ஒன்றே. எங்கும் வியாபித்திருப்பது ஒரே ஆத்மஸ்வரூபம்.

ஆதாரம்: **சனாதன சாரதி**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

இசுசு எல்வ்(F) 350 42 Sri xxxx அலுமினியம் Full Body 16 ½ அடிநீளம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ந.குணபாலசிங்கம் T.P. 021 - 222 5376, 0777 222097

(48050)

தொலைத்தொடர்பு நிலையத்திற்குப் பாவிக்கக்கூடிய கண்ணாடிக் கூண்டுகள் (Booths) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:
021 222 5890 (48115)

### காணி விற்பனைக்கு

இல.764, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு 6.17 குளிக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 3604786, 0777913924

(48068)

### வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் இல.(32) 127 இல் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், சகல வசதிகளும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.:0214591341. (48101)

### மணமக்கள் தேவை

யாழ்.இந்து வேளாா் குலம், 1982 விசாகம் மணமகளுக்கும் , 1975, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் உதவிப் பொறியியலாளராகக் கடமையாற்றும் ரேவதி நட்சத்திரம், 26¾ கிரகபாவமுடைய மணமகனிற்கும் U.S.A. குடியுரிமைபெற்ற 1979, சித்திரை நட்சத்திர மணமகனுக்கும் அழகிய மணமக்கள் தேவை. தொடர்பு: விதூஸ் இல.44, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை.T.P.: 0776146221 (48103)

### தேவை

புத்தக வியாபாரத்திலும் இரும்பு பொருள்கள் வியாபாரத்திலும் அனுபவம் உள்ளவர்கள் தேவை. 17.03.2006 நேரில் வரவும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்

(சி.48367) (21.45.)

### தவறிவிட்டது

பாரதி லேன், K.K.S.Road கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஜெயரட்ணம் கஜேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (871232539V), விசேட அடையாள அட்டை என்பன 12.03.2006 ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் சந்திக்கும் துரை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: கஜமுகன் பான்சி கவுஸ், இல.30, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

(48105)

### சாரதி தேவை

*கன்ரர் வாகனம் ஓடக்கூடியவர் மூன்று வருடங்கள் அனுபவமுள்ளவர் மட்டும் உடன் தேவை.*

தொடர்பு - T.P.: 2783

(சி.48361) (21.45)

### தேவை

ஆண்டு 11 இற்கு ஆங்கில இலக்கியம் கற்பிப்பதற்கு சிறந்த ஆசிரியர் தேவை. கொக்குவில், கோண்டாவில்,திருநெல்வேலி விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
T.P. 0776736913

(48104) (21.45)

### தேவை

பாடசாலை அலுவலக உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை மேற்பார்வையாளரும் விற்பனை உதவியாளரும் உடன் தேவை. விற்பனை உதவியாளர் 30 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

18.03.2006 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் வரவும்

தொடர்பு:

**கஜன்**
அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு.
T.P.: 021 2226678, 0777-550886

(21.45) (48112)

### மகளிர் சங்கத்திற்கு புதிய அலுவலகம்

மாதகல் மேற்கு மகளிர் கிராம அபிவிருந்திச் சங்கத்திற்கென புதிய அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சு. வைரவநாதர் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலக கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி. தர்சினி தம்பிராசா உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.

(ஐ-135)

### வலைப்பந்தாட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் பிரதேசத்தின் கழகங்களுக்கிடையே நடத்தப் பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் வலைப்பந்தாட்டப் போட்டிதவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப் படும் என்று தென்மராட்சிப் பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ். சதீஸ்குமார் தெரிவித்தார்.

(ஐ-75-202)

### ஓம் ஸ்ரீ கனக துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவின் ஆந்திராவில் இருந்து வந்த பிரபல ஜோதிடர் S.B. லஷ்மணா ராஜூ குருஜி துர்க்கா பூசாரி ஆதிவாசி தலைவர் கைரேகை, முகரேகை, ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை, நடப்பவை, நடக்கப் போகின்றவை பற்றிய விவரங்களைக் கூறுவார்.

**ஸ்ரீ பாலாஜீ இன்**
**இல.293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
தொ.பேசி.021 - 222 2341, 0779945721

(48106) (21.45)

### வேலைக்கு ஆள்கள் தேவை (ஆண்கள்)

1. கொம்பியூட்டரில் போட்டோசொப்பில் அனுபவம் வாய்ந்தவர்கள்
2. புகைப்படப் பிடிப்பில் அனுபவம் உள்ளவர்கள்
3. நிர்வாக அலுவலர் (மூன்று மொழியிலும் தேர்ச்சி)
   சுயவிவரங்களுடன் இன்று (16.03.2006)நேரில் சமுகம் தரவும்.
   பி.ப.3.00- 6.30 மணி வரை
4. லிகிதர்- ஆண்/ பெண்

(சி.48365)
(39.21.45)

**ரவி டிஜிற்றல் கலர்லாப் அன்ட் சுப்பலோ**
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். வீடியோ ஓடியோ சென்ரர்.

### யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்

## விசேட மருத்துவ முகாம்

*கொழும்பு அப்பலோ வைத்தியசாலை மருத்துவ முகாம் ஒன்றினை இம்மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் 272, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அப்பலோ வைத்தியசாலையின் தகவல் நிலையத்தில் நடத்தவுள்ளது. இந்தமருத்துவ முகாமில் கீழ்க்காணும் நோய்களுக்கான வைத்திய நிபுணர்களை நீங்கள் சந்திக்கலாம்.*

01. இருதய வைத்திய நிபுணர் (Cardiologyest)
02. நரம்பியல் வைத்திய நிபுணர் (Neuro Physician)
03. குழந்தை மருத்துவ நிபுணர் (Paediatrics)
04. பொது வைத்திய நிபுணர் (General Physician)
05. சத்திர சிகிச்சை நிபுணர் (Surgeon)

மேற்படி மருத்துவ முகாமில் சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்கள் தங்களுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

*மேலதிக விவரங்களுக்கு:*
**அப்பலோ வைத்தியசாலை**
தகவல் நிலையம்,
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 4590500

(சி.48362) (39.45.21)

### மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2006

சமூகசேவையை ஆற்றிவரும் நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் நிதிவளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியிலான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி ஆகிய லீக்குகளில் பதிவு செய்த அனைத்து விளையாட்டுக்கழகங்களும் இப்போட்டிகளில் பங்குபற்றமுடியும். போட்டிகள் யாவும் கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

குறிப்பு: விண்ணப்பிக்கும் ஒவ்வொரு கழகமும் ரூபா 500/= ஐச் செலுத்தி 361, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பமுடிவுத் திகதி 25.03.2006

மேலதிக விவரங்களுக்கு
**0776056483, 0776146077**

(48109) (21.45)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 28 - 08 - 1928



மறைவு 13 - 03 - 2006

எமது ஸ்தாபன உரிமையாளர்கள்
**கந்தவேள், சோமஸ்கந்தா**
ஆகியோரின் அன்புத்தாய்

## திருமதி சற்குணம் முத்துசாமி

அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைவேண்டி எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ஊழியர்கள்,
**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ், யாழ்ப்பாணம்.**
**T.P.:2222386**

(சி-48360) (21.45)

## தள்ளாடி வீதி மழையால் சேதம்

-பரந்தன்,மார்ச் 16

மன்னார் மாவட்டத்திலுள்ள தள்ளாடி வீதி மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால், போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக இந்த வீதியில் இரு புற ஓரங்களும் வெள்ளத்தால் அரித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால், ஒரே நேரத்தில் இரண்டு வாகனங்கள் இவ் வீதியால் விலத்திச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. (ஐ-352-203)

# பூநகரிப் பிரதேசத்துக்கு விரைவில் குழாய் நீர் விநியோகிக்கத் திட்டம்

பரந்தன்,மார்ச் 16

பூநகரிப் பிரதேசத்தில் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும்சிரமப்படுகின்றனர். பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் பவுஸர்கள் மூலமே குடிதண்ணீர் விநியோக்கிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் மக்களின் தேவையில் ஓரளவை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது.

இதற்கெனக் குழாய் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 'சிமெக்' நிறுவனத்தால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இரணைமடுக்குளத்திலிருந்து திறந்து விடப்படும் நீரைப் பரந்தன் சந்தியில் அமைக்கப்படவுள்ள நீர்த்தாங்கியில் சேகரிப்பதெனவும் அங்கிருந்து குழாய் வழியாகப் பூநகரிப் பிரதேசத்துக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் பூநகரிப் பிரதேச உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவுபெற்றுள்ளன. விரைவாகத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-352-202)

# முழங்காவில் பகுதிக்குத் தனியாக ஒரு கால்நடை ஆஸ்பத்திரி வேண்டும்

வெள்ளாங்குளம்,மார்ச் 16

முழங்காவில் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரக் கால்நடை வைத்தியசாலை இல்லாமையால் அப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிாகொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, நாச்சிக்குடா, கரடிக்குண்டு, நொச்சிமுனை, குமுழமுனை, பல்லவராயன்கட்டு, கரியாலை, நாகபடுவான், அன்புபுரம், இரணைமாதா நகர் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கால்நடை வளர்ப்பைத் தமது தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்ற போதும் இங்கு கால்நடை வைத்தியசாலை எதுவுமே இல்லை.

இவர்கள் தமது கிராமங்களிலிருந்து நீண்ட தூரம் பயணம் மேற்கொண்டே தமது கால்நடைகளுக்கு சிகிச்சைகள் வழங்க வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து முழங்காவில் பிரதேசத்திற்கென ஒரு கால்நடை வைத்தியசாலையை அமைத்துத் தர முன்வர வேண்டுமென மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-415-203)

# 'ஒக்ஸ் பாம்' நிறுவனத்தின் உதவியுடன் 20 மீனவர்களுக்கு உபகரணங்கள்

பரந்தன்,மார்ச் 16

முல்லைத்தீவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 20 மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினரின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரால் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற உபகரணம் வழங்கும் நிகழ்வில் வலை, படகு, வெளி இணைப்பு இயந்திரங்கள் உள்ளடக்கிய உபகரணத் தொகுதிகள் 20 மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

'ஒக்ஸ்பாம்' நிறுவன நிகழ்ச்சித் திட்ட அலுவலர் செந்தில் குமரனும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கினார். (ஐ-352-203)

## கிளிநொச்சி - வலைப்பாடு பஸ்சேவை ஆரம்பம்

வெள்ளாங்குளம், மார்ச் 16

கிளிநொச்சியில் இருந்து வலைப்பாடு பிரதேசத்திற்கான போக்குவரத்துச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களாக இந்தப் பிரதேசங்களுக்கிடையேயான பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டு கிளிநொச்சியில் இருந்து கிராஞ்சி வரை மட்டும் கடந்த 4 மாதங்களாக நடைபெற்றுவந்தது. தற்போது பயணிகளின் நலன் கருதி மீண்டும் வலைப்பாடு வரை பஸ்சேவை நடத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-415-203)

# இரணைமடுக்குளத்தை முற்றாக புனரமைக்க நிதி உதவி போதாது!

அக்கராயன்,மார்ச் 16

இரணைமடுக்குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி உதவிகள் முழுமையாகக் கிடைக்காமையால் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனமொன்று இரணைமடுக்குளப் புனரமைப்பு தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு எம்மிடம் அறிக்கை ஒன்றையும் வழங்கியுள்ளது. அந்த அறிக்கையில் இக்குளப் புனரமைப்பிற்கு 4 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி தேவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நிறுவனங்களிடம் இதற்கான நிதியுதவியை வழங்குமாறு கோரியிருந்தோம். அவர்களிடமிருந்து ஆயிரம் கோடி ரூபா நிதி மட்டுமே கிடைத்துள்ளது.

இந்த நிதிமூலம் இரணைமடுக்குளத்தின் அவசர புனரமைப்பு வேலைகளைச் செய்யவுள்ளோம். எனினும், அக்குளத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை எண்ணி மிகவும் கவலையடைகின்றோம் - என்றார் அரச அதிபர். (ஐ-420-203)

## பொதுநோக்கு மண்டபம் திறப்பு

பரந்தன்,மார்ச் 16

மாங்குளம் கல்வாரி கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 'நியாப்' திட்டம் II இன் கீழ் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கற்குவாரி மாதர் சங்கத் தலைவி வி.ஜனாகி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மண்டபப் பெயர்ப் பலகையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

மண்டபத்தை 'நியாப்' திட்டப் பிரதிப் பணிப்பாளர் சு.சிவகுமார் நாடா வெட்டித் திறந்து வைத்தார். (ஐ-352-203)




# கரைச்சிப் பிரதேச சபையை நகரசபையாக மாற்ற முயற்சி

அக்கராயன்,மார்ச்16

கரைச்சிப் பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்று கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த கலங்களில் இடம்பெற்ற போர்ச் சூழ்நிலையின்போது இந்தப் பிரதேச சபை அக்கராயனில் இயங்கியது.

அக்காலத்தில் போரால் எமது பிரதேச சபை அழிவடைந்திருந்தது. தற்போது மீண்டும் இதற்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு அதில் செயற்பாடுகள் யாவும் நடைபெற்றுவருகின்றன.

வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் இந்தப் பிரதேச சபை ஒரு நகர சபை செய்ய வேண்டிய பணிகளையும் ஆற்றிவருகின்றது.

இந்த நிலையில் எமது பிரதேச சபையை நகர சபையாகத் தரம் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன -என்றார். (ஐ-420-203)

## மருத்துவ முகாம்

ஒட்டுசுட்டான்,மார்ச்16

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் நடமாடும் மருத்துவ சேவை ஒன்று முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பாடசாலை அதிபர் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பற்சிகிச்சை, கண்சிகிச்சை பொது மருத்துவம் என அனைத்து சிகிச்சைகளும் நடைபெற்றன. முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், வைத்தியகலாநிதி திருமதி கரிகாலன், தமிழீழ மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள், மருத்துவப்போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (203-341)

# தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடு வவுனியாவில் பூர்த்தி

வவுனியா,மார்ச் 16

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு கட்டமாக அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்களை அனுப்புவதற்காக வவுனியா தேர்தல் பணிமனையினால் வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பெட்டிகள் வவுனியா தபால் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டன. வாக்குச்சீட்டுக்கள் அனுப்புவதற்கான பணிகள் கடந்த சில நாள்களாக வன்னி உதவி தேர்தல் ஆணையாளர் கருணாநிதி தலைமையில் இடம்பெற்றுவந்தன.

இதே வேளை மன்னாரில் இருந்து 444 பேரும் முல்லைத்தீவில் இருந்து 155 பேரும், வவுனியாவில் இருந்து ஆயிரத்து 485 பேரும் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருந்தனர் என் வன்னி உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-164)



கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் 4ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தேசியத் தலைவருக்கான கேடயத்தை முத்துஐயன்கட்டு ஐக்கிய விளையாட்டுக் கழக செயலாளர் மருத்துவ மனையின் நிர்வாகப் பொறுப்பாளர் புலிமறவனிடம் கையளிப்பதையும், வாழ்த்துச் செய்தியை ஒட்டுசுட்டான் அழகக சங்கப் பொருளாளர் வைத்திய கலாநிதியும் ஆலோசகருமான அருந்ததியிடம் கையளிப்பதை முதலிரு படங்களிலும் -

மருத்துவமனையின் வளர்ச்சிக்காக கருவேலன் கண்டலைப் பிறப்பிடமாகவும் சுவீடன் நாட்டில் தற்போது வசிப்பவருமான எதிர்வீரசிங்கம் இலட்சம் ரூபா நிதியினையும், தொலைக்காட்சி, இலத்திரனியல் பொருள்கள்ளயும் டாக்டர் ஈழவாணியிடம் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

# ஐந்தாவது பிறந்ததின வாழ்த்து



10
03
2000

பூநகரி - பள்ளிக்குடாவைச் சேர்ந்த

**இந்திரன் - சரோஜினி** தம்பதியரின் செல்வப் புதல்வி **இந்துஷா**

தனது ஐந்தாவது பிறந்தநாளை இன்று (16.03.2006) வியாழக் கிழமை தனது இல்லத்தில் கொண் டாடுகிறார். செல்வி இந்துஷாவை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா மார், பெரியம்மாமார், மாமன்மார், சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் தொட் டப்பா, தொட்டம்மா, அன் புத் தம்பி நிக்ஷன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் இந்து ஷாவை இறைவன் அருள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார் கள்.

செல்வப்புதல்வி
**இந்துஷா**

**இந்திரன்**
**குடும்பத்தினர்.**
(பள்ளிக்குடா - பூநகரி)
(48370) (24-18-11-15)



# திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் பங்குனித் திங்கள் 04ஆம் நாள் (18.03.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் 12 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்,

திருநிறை செல்வன் **குலேந்திரன்** அவர்களுக்கும்

திருநிறை செல்வி **ஜெயந்தினி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு நாச்சிமார் கோயிலில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.பொன். தெண்டாயுதபாணி**
பூம்பொழில்
வட்டு.வடக்கு,சித்தன்கேணி.

**திரு.திருமதி நா.தியாகராஜா**
35, பெரிய தம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)





**தளபாட உற்பத்தியாளர்களே, அரிசி ஆலை அதிபர்களே உங்களுக்கு ஒரு நற்செய்தி**

எம்மிடம் 10'', 12'', 14'', 16'' மரம் சீவும் பட்டறைகள் மற்றும் மிளகாய் அரைக்கும், நெல்குற்றும், அரிசி அரைக்கும் இயந்திரங் களும் அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள் என்பனவும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**T.E.பிள்ளை அன் சன்**
**218, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே.7985**



ML392C


# சத்யசாயி மண்டபத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

சித்தன்கேணி, பொன்னாலை வீதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள சத்யசாயி பஜனை மண்டபத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும்.

(ஐ-204)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஸ்தாபகரான அமரத்துவமடைந்த

**வேலுப்பிள்ளை சரவணமுத்து**
**(ஆசைப்பிள்ளை)**

அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தி னருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் பழைய மாணவர்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பழைய மாணவர்கள் சங்கம்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண**
**மகா வித்தியாலயம், கோண்டாவில்.**

(48123)
(21-11-18-15)


# கிளிநொச்சியில் இன்று கரபந்தாட்டம்

வட்டக்கச்சி,மார்ச்16

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் மா வட்ட மட்ட பெரு விளையாட்டுப்போட்டி களில் இன்று காலை 8.30 மணிக்கு கனக புரம் ம.வித்தி. மைதானத்தில் 15 வயது ஆண்களின் பிரிவுக்கான கரபந்தாட்டப்போட்டி இடம்பெறும்.

நாளை காலை 8.30 மணிக்கு கிளி நொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் 15 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கப் போட்டி நடைபெறும்.

(3-405-203)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஸ்தாபகர்களில் ஒருவரான

**வேலுப்பிள்ளை சரவணமுத்து**
**(ஆசைப்பிள்ளை)**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண**
**மகா வித்தியாலயம், கோண்டாவில்.**

(48124)
(21-11-15-18)



## வேலை ஆள்கள் தேவை

* சப்ளையர்ஸ்
* பார்சல் கட்டுபவர்
* ரீ மேக்கர்

தொடர்பு:
**திறீ ஸ்டார் ஹோட்டல்**
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 7125 , 222 3817

(48376)
(21-11-15-18)


# தனித்துச் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

வலி.வடக்கு,மார்ச் 16

வீதியால் தனித்துச் சென்ற பெண்ணின் 30ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங் கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெ ரியாத நபர்களால் பறித்துச் செல்லப்பட் டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணி யளவில் தெல்லிப்பழை 8ஆம் கட்டை ஒழுங்கையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இளம் விதவைப் பெண்ணொருவர் வீதி யில் தனித்துச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியா தவர்கள் தங்கச் சங்கிலியை அறுத்தனர். அப்பெண் கூக்குரலிட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த பொதுமக்களில் சிலர் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளை வேறு மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்று மோட்டார் சைக் கிளை மடக்கிப் பிடித்தபோது திருடர்கள் கிறிஸ் கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டுத் தப்பி விட்டனர்.

மோட்டார் சைக்கிளின் இலக்கம் பொது மக்களால் குறிக்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது.

(ஐ-86-202)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா சீனிவாசகம்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சீனிவாசகம் அவர்கள் கடந்த 14.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மக னும் சின்னத்துரை - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீ காந்தராசா (பிரான்ஸ்), சூரியகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீலட்சுமிகாந்தன் (கொழும்பு), ஸ்ரீஅச்சுதானந்தன் (கொழும்பு), ஸ்ரீகாந்திமதி (சுழிபுரம்), ஸ்ரீவிக்கினேஸ்வராசா (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசமூர்த்தி, சிவமலர், செல்வமலர் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48122)(21-18-15-11)

### முத்துவேலு சிவசேகரம்

மயிலிட்டி தெற்கு, கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப் பிடமாகவும் சங்கானை, மாளியவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு சிவசேகரம் அவர்கள் 14.03.2006 செவ் வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு - பொன்னம்மா தம் பதியரின் அன்பு மகனும் மலர்தேவியின் அருமைக் கணவரும் கோபி, கோகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபூபதி, ஜெயபூபதி, தர்மசேகரம், தர்மபூபதி ஆகியோரின் அன்புச் சகோ தரனும் திலகதாஸ் (நாடாளுமன்றம் - கொழும்பு), தம்பிப் பிள்ளை, குணசீலன், சிதம்பரநாதன் (அரசினர் ஆஸ்பத்திரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்கு சங்கானையில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(48122)(18-11-15)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

763
நீலம்

மீனம்

14-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4148988 - 4158885

வெற்றி இலக்கங்கள் **02 09 27 29**

ஜக்பொட் பரிசு ரூபா 45,82,700/- வெல்லப்படவில்லை

| | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 2,34,588 | 10/- | 23,45,880/- |
| 2 இலக்கங்கள் | 21,576 | 20/- | 4,31,520/- |
| 1 இல+இலச்சினை | 21,442 | 30/- | 6,43,260/- |
| 2 இல+இலச்சினை | 1,928 | 100/- | 1,92,800/- |
| 3 இலக்கங்கள் | 567 | 500/- | 2,83,500/- |
| 3 இல+இலச்சினை | 54 | 5,000/- | 2,70,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+இலச்சினை | - | 45,82,700/- | - |
| மொத்தம் | 5 | | 44,66,960/- |
| | 2,80,163 | 2,10,450/- | 10,52,250/- |
| மொத்த பரிசுத் தொகை | | | 55,19,210/- |

இந்த வெள்ளிக்கிழமை ரூபா **51,06,950/-**

| | |
|---|---|
| கொழும்பு | 4157430-2-56 |
| நுவரெலியா | 4150062-3-77 |
| மட்டக்களப்பு | 4149210-6-66 |
| களுத்துறை | 4151520-3-28 |
| கொழும்பு | 4155112-5-54 |

அபிவிருத்தி லொத்தர் சபை



# UNIT

Imported Monitors & Tv's @ Low Priced

347,K.K.S. Road, Manohara Junction, Jaffna.

# நீர்வேலியில் யோகாசனப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்.16

நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் இந்து பரிபாலன சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். சிவலிங்க யோக கேந்திரா நிலையம் நடத்தும் யோகாசனம், தியானப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு இந்து பரிபாலன சபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபையின் செயலாளர் சி.சசீவன் வரவேற்புரையினையும், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் தி. வேல்நம்பி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் இ. குணநாதன், அறநெறிப் பாடசாலையின் அதிபர் த.பரராஜசிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

யோகப்போதனாசிரியர் யோக.ரவீந்திரன் 'யோகாசனமும் மனித வாழ்வும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

(எ-13)

அம்மன் துணை

## மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் உற்சவம்

**அம்பிகை அடியார்களே!**

இந்த ஆண்டு பங்குனித் திங்கள் உற்சவமானது

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும்.

காலை 8 மணிக்கு அபிஷேகம்
காலை 9 மணிக்கு பூஜையும் உற்சவமும்
மாலை 4 மணிக்கு அபிஷேகம்
மாலை 5 மணிக்கு பூஜையும் உற்சவமும்.

**மார்ச் 20, 27, ஏப்ரல் 3, 10 ஆகிய திகதிகளில் பங்குனித் திங்கள் உற்சவம் நடைபெறும்.**

உற்சவத்தை முன்னிட்டு 18.03.2006 சனி பிற்பகல் 2 மணி தொடக்கம் கடைகள் கொடுக்கப்படும். ஐஸ்பழ வான்காரரும் மற்றும் கடைக்காரர்களும் கடை நடத்துவதற்கான இடத்தை எடுத்து பணம் முழுவதையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் வடக்கு.* (48128) (54-17-49) சி. சிவகுரு (தர்மகர்த்தா)

## கண்ணீர் அஞ்சலி

*எமது திணைக்களத்தில் கடமையாற்றும்*

**செல்வி பிரேமாவதி விசுவலிங்கம்**

(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) அவர்களின் தந்தையாரான

**மாதர் விசுவலிங்கம்** (ஆசிரியர்)

அவர்கள் (08.03.2006) ஆம் திகதியன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(48132) (54-17-49)

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் அலுவலக உத்தியோகத்தர்களும், யாழ்ப்பாணம்.


## நாகம்ஸ் சுன்னாகம்

ஜெயம்ரவி, கர்மனா, பிரகாஸ்ராய்




காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## ராஜா யாழ்ப்பாணம்

17 வரை சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் நடித்த



கோவை பிரதர்ஸ்



கா.நே. 10.30,2.00, 5.00 மட்டும்

18 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு ஸ்ரீகாந், மீராஜஸ்மின் நடித்த மெக்குரிப் பூக்கள்

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குணால், கம்னா, நிழல்கள்ரவி நடித்த

**திருடிய இதயத்தை**

காட்சிநேரம்: 10.00, 1.30, 4.30 (பு.நே.)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் இராசரத்தினம்

(சின்னராசா)

(ஸ்ரான்லி றோட், ஸ்ரீமுருகன் எலக்றிக்ஸ், வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர்)

சண்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை சிவகுருநாதர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராசரத்தினம் (சின்னராசா) அவர்கள் நேற்று (15.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம்-பாக்கியம் தம்பதியரின் மகனும் திரவியத்தின் அன்புக் கணவரும் பஞ்சாட்சரத்தின் அன்புச் சகோதரனும் சிவலோகநாயகியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2006) வியாழக்கிழமை அச்சுவேலியில் உள்ள சகோதரன் பஞ்சாட்சரத்தின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (சி-48384) (54-17-49)

தகவல்: வ. பஞ்சாட்சரம் (சகோதரன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 11 - 02 - 1925



விண்ணில் 14 - 02 - 2006

### திருமதி மயிலி செம்பன்

*குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய எம் - அம்மம்மாவே!*
*குவலயத்தை விட்டு நீங்கள் சென்றதனால் கலங்குகின்றோம்*
*கலகல எனச் சிரித்திடும் உங்கள் அன்பு முகத்தை இனி எங்கே - காண்போம்?*
*வையகம் போற்ற வாழ்ந்தவரே வானகம் சென்றீரோ!*
*கண்கண்ட தெய்வமே ஆருயிர் அம்மம்மா*
*செல்லமாய் அரவணைத்திடும் அன்பின் அம்மம்மாவே*
*அன்பாய் அரவணைத்திடும் பாசமிகு அம்மாவே*
*உங்கள் பாசத்திற்காய் பாரினில் நாம் ஏங்குகின்றோம்*

இன்று (16.03.2006) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.* (48136) (54-17-49) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முத்துவேலு சிவசேகரம்



(மாளியவத்தை, சங்கானை)

கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மாளியவத்தை, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு சிவசேகரம் (ஓய்வூதியர், படவரைஞர், நீர்ப்பாசன இலாகா) அவர்கள் 14.03.2006 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மலர்தேவி (ஓய்வுபெற்ற இசை ஆசிரியை, விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்) அவர்களின் அன்புக் கணவரும், கோபிகிருஷ்னா, கோகுல கிருஷ்னா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாளியவத்தை, சங்கானை.* (சி-48383) (54-17-49)

தகவல்: குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை 14.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் பாசமிகு கணவரும் சுந்தரராணி, சுந்தரராஜன், பாலராணி, காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமசுந்தரம், ஆனந்தபாமதி காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன், துரைராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சந்திரசேகரா் வைதேகி (கொழும்பு), திருமதி முரளிதரன் தனுஷியா (சிங்கப்பூர்), திருமதி கண்ணன் தீபாஷினி (கனடா), திருமதி சுதர்சன் சுதர்சனா (சுவிஸ்),காயத்திரி (யாழ். பல்கலைக்கழகம்), நந்த கோபன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆவரங்கால் மேற்கு, வன்னியசிங்கம் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.* (48134) (54-17-49)

தகவல்: சுந்தரராஜன் (மகன்).

### திருமதி திலகரத்தினம் நல்லையா

சுதுமலை தெற்கு,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகரத்தினம் நல்லையா அவர்கள் நேற்று (15.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நல்லையாவின் அன்பு மனைவியும் சுசிலாதேவி, ஆனந்தமோகன், சிவானந்தகுணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தினேஸ்சங்கர் மௌலீசன், சந்திரவதனி, சுவாஜினி, மயூரதன், அபிலாஷ், லகிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஏகாம்பரநாதன், கேசினி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2006) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (48137) (54-17-49)

தகவல்: க. நல்லையா.



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ். மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

நண்பகல் 12.30 மணி நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் எதிர் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம் இப்போட்டியில் வெற்றிபெறும் அணி பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி அணியுடன் மோதும்.

பிற்பகல் 1.30 மணி கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி.

(எ-190)


## கல்வியாண்டு 2006 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### Master of Business Administration (MBA)



Available - Accessible - Affordable personalized education

Sikkim Manipal University

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.

Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

M B A

Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

**Eligibility**

Degree or equivalent profe-ssional qualifica-tion. Work experience will be an added advantages

**Duration**

2 years (Part time)

**FIRST SEMESTER**

- Management process and organization behavior
- Internet Application
- Marketing Management
- Human Resource Management
- Operation Management
- Financial Management
- Management Information System

**SECOND SEMESTER**

- Strategic Technology Management
- Management of Technology transfer, -absorption & IPR
- Business Process, Re-Engineering
- Enterprise Resource Planning
- E-customer Relationship Management & -Supply Chain Management
- Conflict Management & Negotiation Skills
- History of Management, Case studies

**THIRD SEMESTER**

- Infrastructure Management
- Fundamentals of Infrastructure Project Finance
- Infrastructure Development & Policy Planning
- Project Management
- Decision Support System

**FOURTH SEMESTER**

- Electives *
- Project

* HRD + MKT / Finance + MKT / System + MKT

**IIS CITY CAMPUS**

# 200, Sivan Pannai Road, Jaffna.
T.P. No. : 021 222 8060 / 021 222 2201

# கறுப்புத் துணியினால் முகத்தை மறைத்து வீடு புகுந்து கொள்ளை!

## உடுவிலில் நேற்றுப் பட்டப்பகலில் சம்பவம்

சுழிபுரம்,மார்ச் 16

பட்டப்பகலில் கறுப்புத் துணியால் முகத்தை மூடி மறைத்துக்கொண்டு வீட்டுக்குள் புகுந்த நால்வர் அங்கிருந்த இளம் குடும்பப் பெண் ஒருவரை கட்டிப்போட்டுவிட்டு சுமார் 15 பவுண் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கறுப்புத் துணியால் முகத்தை மூடி மறைத்துக்கொண்டு வீடு புகுந்து கொள்ளையிட்டவர்களில் இருவர் பெண்கள் எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம், நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் உடுவில், அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

மரக்கறி வியாபாரத்தின் பொருட்டு கணவர் சந்தைக்குச் சென்றுவிட குறிப்பிட்ட பெண் தனது குழந்தையுடன் வீட்டில் இருந்துள்ளார். குழந்தையும் நித்திரையாகிவிட குறிப்பிட்ட பெண், சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார் என்றும் -

அவ்வேளை - திடீரென வீட்டுக்குள் புகுந்த நால்வர் குறிப்பிட்ட பெண் மீது திடீரெனத் தாக்குதல் தொடுத்துள்ளனர். தாக்குதலால் அவர் நிலத்தில் வீழ்ந்ததும், வாயினுள் துணியைத் திணித்தும் மற்ற இரண்டு கைகளையும் பின்புறமாக வளைத்தும் கட்டியுள்ளனர்.

பின்னர் குறிப்பிட்ட பெண் அணிந்திருந்த நகைகளை அபகரித்த இந்தக் குழுவினர் குழந்தைகளின் நகைகளையும் தம்முடன் எடுத்துச்சென்றுவிட்டனர்.

வியாபாரம் முடிந்து வீடு திரும்பிய கணவர், தனது மனைவி கட்டிப்போட்டுள்ளதைக் கண்டு பதற்றமுற்றதுடன், மூச்சு எடுக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந்த மனைவி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார். உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த தபேந்திரன் செல்வநாயகி (வயது-27) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-24-13)

## கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் உறுப்படுத்துகிறார் 'பவ்ரல்' அமைப்பின் தலைவர்

கொழும்பு,மார்ச் 16

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன என்பதை உறுதிபடக் கூறினார் 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்ரிகோ.

நேற்று கொழும்பில் தேசிய நூலகத் தலைமையகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளை 'பவ்ரல்' அமைப்பு கண்காணிப்பது தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்காக இந்தச் செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த கிங்ஸ்லி றொட்ரிகோ கிழக்கில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் - முஸ்லிம் அமைப்புகளான ஜிகாத், ஜம்மய்துல் இஸ்லாம் போன்ற ஆயுதங்கள் உடைய இயக்கங்கள் - உள்ளன என்று குறிப்பிட்டார்.

('பவ்ரல்' அமைப்பின் தலைவர் நிகழ்த்திய உரை முழு விவரம் நாளைய உதயனில்)

## பிரபல ஓவியக் கலைஞர் ஆட்டிஸ் மணியம் நேற்றிரவு காலமானார்



பிரபல ஓவியக் கலைஞர் கலாபூஷணம் பெரியதம்பி சுப்பிரமணியம் (ஆட்டிஸ் மணியம் - வயது 82) நேற்றிரவு காலமானார்.

ஆலயங்கள், சினிமா தியேட்டர்கள் மற்றும் கலைமன்றங்களில் தமது ஓவியத்திறமையைக் காட்டி கலையுலகினால் சிறந்த ஓவியர் எனப் பாராட்டப்பட்டவர் ஆட்டிஸ் மணியம்.

சினிமாக் 'கட்-அவுட்'டுகள் வரைவதில் தனக்கே உரிய தனிப் பாணியைப் பின்பற்றிய ஆட்டிஸ் மணியம், சினிமா ரசிகர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தவர்.

இவருக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூஷணம்' விருதினையும், வடக்கு, கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சு 'கலைஞானகேசரி' விருதினையும் வழங்கிக் கௌரவித்தன. கடந்த இரண்டு வாரங்களாக சுகயீனமுற்றிருந்த இவர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் காலமானார். (எ)

## கூட்டமைப்பினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 மணிக்கு இடம்பெறும்.

இச்சந்திப்பின்போது தேர்தல் தொடர்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, ஜெனீவாப் பேச்சு மற்றும் தற்போதைய அரசியல் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க-13)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க வேண்டும். அப்போதுதான் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சீராக மேற்கொள்ளமுடியும்' - என்று படை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர் என அறியவந்தது.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களின்படி அந்தந்த உள்ளூராட்சி சபை எல்லைக்குள்ளேயே அந்தந்தப் பிரிவுக்குரிய வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். கொத்தணி அடிப்படையில் அமைப்பது சாத்தியம் இல்லை எனத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் படை அதிகாரிகளுக்கு விளக்கினர் என்றும் கூறப்படுகின்றது.

படைத்தரப்பின் கோரிக்கை குறித்து தேர்தல் திணைக்கள யாழ். அதிகாரி தேர்தல் ஆணையாளருக்கு விவரமான அறிக்கை ஒன்றை அனுப்பவுள்ளார் என்றும் கூறப்பட்டது. (எ-க-3)

## வாழைச்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையில் நேற்று (புதன்கிழமை) அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் அழைப்பை மீறி போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்ஸின்மீதே இனந்தெரியாத நபர்களினால் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு டிப்போவுக்குச் சொந்தமான இந்த பஸ் வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது வாழைச்சேனை பிரதான வீதியில் வைத்து காலை 10 மணியளவில் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகியது.

பஸ்ஸின் சாரதியும், நடத்துநருமே இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. வாழைச்சேனைப் பிரதான வீதிகளில் பொலீஸார் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (எ-க-13)

## புலிகள் ஆயுதங்களைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்துக்கொள்வதற்காகவே ஒட்டுப்படையினர் ஆயுதம் ஏந்தியுள்ளனர்.

புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு. சட்டப்படி அவர்களால் ஆயுதம் ஏந்தமுடியாது. இந்த நிலையில் ஒட்டுப்படையினரின் ஆயுதங்களைக் களையவேண்டும் எனக்கூறும் அதிகாரம் புலிகளுக்கு இல்லை.

புலிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே ஒட்டுப்படையினர் ஆயுதம் ஏந்தியுள்ளனர். புலிகள் கூறுவது போல் ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்றால் முதலில் புலிகள் தங்களின் ஆயுதங்களைக் களையவேண்டும்.

இல்லையேல், ஒட்டுப்படையினரைக் கொலை செய்யமாட்டோம் என்ற உத்தரவாதத்தை அவர்கள் வழங்கவேண்டும். அவ்வாறு உறுதிமொழியளித்தால் ஒட்டுப்படையினரின் ஆயுதங்களைக் களைவதுபற்றி யோசிக்கலாம்.

புலிகள் பயங்கரவாத அமைப்பு அல்லவென அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். புலிகள் பயங்கரவாத அமைப்பு என்பதை முழு உலகமுமே ஏற்றுக்கொண்டுள்ளது. சில நாடுகள் புலிகளை பயங்கரவாத அமைப்பு எனக்கூறித் தடைசெய்துமுள்ளன.

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டணை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்தியப் பிரதமரையும், இலங்கை ஜனாதிபதியையும் கொலைசெய்துள்ளனர்.

புலிகள் பயங்கரவாத அமைப்பு என நிரூபிக்க இவை போதுமான ஆதாரங்களாகும்.

ஆகவே, புலிகள் தங்கள் ஆயுதங்களைக் களையாதவரை ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவது சாத்தியப்படாது. - என்றார் அவர்.

இதேபோன்ற கருத்தை இலங்கையின் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவும் அண்மையில் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## தபால்மூல வாக்களிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்தேசிய அபிலாசைகளை முன்னிறுத்தி தமிழரக்கட்சியினர் வேட்பாளர்களை நியமித்துள்ளமை தமிழ்பேசும் மக்களது பரந்துபட்ட ஆதரவினைப் பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியம் என்ற அடித்தளமே தமிழ் பேசும் மக்களது இருப்பையும் வாழ்வுரிமையையும் நிர்ணயிக்கவல்லது, சிங்களப் பேரினவாதத்தை முறியடிக்கும் வலுவைக் கொண்டது அனைத்துலகத்திற்கும் அரசியல் ரீதியிலான வாக்குக்கணிப்பாக உள்ளூராட்சி சபைத்தேர்தல் விளங்கப்போகிறது.

எனவே, தமிழ்பேசும் மக்களது ஏகோபித்த தமிழ்தேசியத்திற்கான ஆதரவு வாக்களிப்பு இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் அவசியத் தேவையாகிறது.

முதிப்புக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோளை முன்வைக்கிறோம். தாயகத்தின் அபிலாசைகளையும், சிங்களப் பேரினவாதத்திற்கு துணைபோகும் தேசத்துரோகக் கும்பலது நிலைப்பாடுகளையும் நீங்கள் அறிவீர்கள்.

தாயகத்தின் அழைப்பு உங்களது நெஞ்சத்தினடியிலே சுடராக ஒளிவீசுவதை யாவரும் புரிந்துகொண்டுள்ளனர்.

மார்ச்மாதம் 20, 21 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள தபால்மூல வாக்களிப்பில கலந்து கொள்ளுங்கள். உங்கள் நெஞ்சத்தில் ஒளிரும் சுடராகிய தமிழ்த் தேசியத்திற்கு வாக்களியுங்கள். அதாவது உளளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு தமிழரசுக்கட்சியால் நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களில் உங்கள் விருப்பத்தெரிவாகிய மூவருக்கு புள்ளடியிட்டு வாக்களியுங்கள்.

தேசியத்திற்கான தங்களது வாக்களிப்பு தமிழரது எதிர்கால சுதந்திரத்தை, பாதுகாப்பை கௌரவமான வாழ்க்கையை நிர்ணயிக்க வல்லது என்பதை வெளிப்படுத்த தயங்காதீர்கள். சிங்களப் பேரினவாதத்திற்கு விலைபோகும் தமிழ்த்தேச துரோகிகளை ஓரங்கட்டுங்கள் தமிழ்த்தேசியத்தின் வாசல் திறக்க தமிழ்த்தேசியத்திற்கு வாக்களியுங்கள் - என்று அதில் உள்ளது.

### நேரசூசி மாற்றம்

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஆண்டு 13 பொதுப் பரீட்சையின் இன்றைய (16.03.2006 வியாழக்கிழமை) பாடங்கள் (புவியியல் I, வணிகக் கல்வி I, பௌதிகவியல் I, நாடகமும் அரங்கியலும் II) 27.03.2006 திங்கட்கிழமை நடைபெறும். நேரசூசி மாற்றத்தை அநுசரித்து பரீட்சையை செவ்வனே நடத்தி ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்துப் பாடசாலை அதிபர்களும் வேண்டப்படுகின்றனர்.

தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம். பரீட்சை இணைப்பாளர்.

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna,
55, Arasady Road Jaffna.
T.P: 021 2225170, 0777846811
Dip. In Hardware
Dip. in Network
Day class Batch 2
20.03.2006
குறுகிய காலத்தில் முழுஅளவிலான 100% செய்முறைப்பயிற்சி நெறியினை மேற்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
பிரிவுIII ஆரம்பம் 18,20.03.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING 5 Months
DIPLOMA IN WEB DESIGNING 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL 2 Months
Softview Computer College
www.scclanka.com scclanka@hotmail.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

Special Classes
For Office Staffs
Start on - 18-03-2006 (7.00 p.m)
MS-Office
இக் கற்கைநெறியானது Basic இல் இருந்து கற்பிக்கப்படும் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

UNIT EDUCATION
100%
செய்முறைப் பயிற்சியுடன்
Hardware & Networking
16/1, Killnar Lane, Jaffna.

## மரண அறிவித்தல்கள்

### கலாபூஷணம் பெரியதம்பி சுப்பிரமணியம் (ஆட்டிஸ் மணியம்)



நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி சுப்பிரமணியம் (ஆட்டிஸ் மணியம்) அவர்கள் நேற்று (15.03.2006) புதன் கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(48138)(30)

55, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
பே.நிரோஷானந் (மருமகன்).

### சதாசிவம் கார்த்திகேசு

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட எழுதுநர், பிரதேச செயலகம் சங்கானை)

மூளாயைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கார்த்திகேசு நேற்று (15.03.2006) புதன்கிழமை காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சந்திரா வாசா'
மாதர் சங்க வீதி,
சித்தங்கேணி.

(சி-48385)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




## முதலாம் தவணைப் பரீட்சை ஆண்டு 11

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

## தமிழ்

ஒரு மணித்தியாலம்

திருமதி. V. விமலச்சந்திரன்
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

I சொற்கூட்டங்களுள் தமிழ் நெடுங்கணக்கு வரிசைப்படி ஒழுங்காக அமைந்துள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
1) களங்கம், கால்கோள், ஆரம்பம், தூய்மை, பாதகம்
2) அறிவியல், கயமை, சால்பு, வறுமை, விறல்
3) கடைக்கன், சூளுரை, பேதை, மேதை, சுதந்திரம்
4) வேளாண்மை, வருந்துதல், உலோபம், அலட்சியம், உணவு

2) அகந்தை கொண்டவர் அழிவது உறுதி, அகந்தை என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
1) பணிவு 2) செல்வம் 3) செருக்கு 4) கீழ்மை

3) அரசன், உபாத்தியாயன், தாய்தந்தை, தமையன் என்போர்
1) ஐங்குரவர் 2) ஐம்புலன் 3) ஐந்திணை 4) ஐந்திலக்கணம்

4) ஒருவர் ஒரு விடயத்தில் பற்றில்லாமல் இருப்பதை உணர்த்தும் உவமைத் தொடர்
1) சிறகற்ற பறவைபோல் 2) சித்திரப் பதுமைபோல
3) திரிசங்கு சுவர்க்கம் போல 4) தாமரை இலைத் தண்ணீர் போல

5) தன்னுடைய பொருளே சிறந்தது என்பதை உணர்த்தும் பழமொழி
1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3) காகத்துக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு
4) விளையும் பயிரை முளையிலே தெரியும்.

6) கொழுகொம்பற்ற கொடி நுடங்கியது நுடங்குதல் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
1) பளைதல் 2) தாழ்தல் 3) அசைதல் 4) சோருதல்

7) விதவை ஒருத்தி சமூகத்தில் ஒதுங்கி வாழக் கூடாது இங்கு விதவை என்பதன் எதிர்ப்பாற்சொல்
1) கணவன் 2) விதவையன் 3) மணவாளன் 4) தபுதாரன்

8) பின்வருவனவற்றில் பன்மையில் வழங்காத சொல்
1) மழை 2) காடு 3) காலம் 4) மலர்

9) பழைய காலந்தொடக்கம் இன்று வரையுள்ள நூதனமான பொருட்களை காட்சிக்கு வைக்கும் இடம்
1) புகலரண் 2) ஆதுலர்சாலை 3) சுவடிகள் கூடம் 4) அரும்பொருட் காட்சிச்சாலை

10) சின்னஞ்சிறிய குழந்தைகள் மைதானத்தில் ஓடி விளையாடினார்கள் இங்கு சின்னஞ்சிறிய என்பது
1) இரட்டைமொழி 2) இணைமொழி
3) அடுக்குத் தொடர் 4) அடுக்கிடுக்குத்தொடர்ப

11) சூரியோதயம் என்பதைப் பிரித்தெழுதினால்
1) சூரியன் + உதயம் 2) சூரிய + உதயம்
3) சூரியா + உதயம் 4) சூரியோ + தயம்

12) பெரியோர் எவ்வித துன்பம் வந்தாலும் தம் நிலையினின்றும் ஒருபோதும் மாறுபடார் என்னும் கருத்தை தரும் பழமொழி
1) உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று
2) எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
3) எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காடுமா
4) தேய்ந்தாலும் சந்தணக்கட்டை தன்மணம் மாறாது.

13) தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது.
1) அகராதி 2) அரிச்சுவடி 3) நெடுங்கணக்கு 4) கலைக்களஞ்சியம்

14) குமரன் தனது குடும்பத்தின் உயர்வு கருதி அல்லும் பகலும் உழைத்தான் அல்லும் பகலும் என்னும் இணைமொழி குறிக்கும் பொருள்
1) நாளும் பொழுதும் 2) இரவும் பகலும்
3) காலையும் மாலையும் 4) தினந்தோறும்

15) மழை பெய்ய குளிர் பரவியது. இதில் பெய்ய என்பது
1) இறந்தக்காலப் பெயரெச்சம் 2) இறந்தகால வினையெச்சம்
3) நிகழ்காலப் பெயரெச்சம் 4) நிகழ்க்கால வினையெச்சம்

16) இந்தியாவின் பாதுகாப்பு மந்திரி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். ராஜினாமா என்பது எம்மொழிச்சொல்
1) தெலுங்குமொழி 2) பிரான்சிய மொழி
3) உருதுமொழி 4) ஆங்கில மொழிச்சொல்

17) நூல் + பெருமை என்பதைச் சேர்த்தெழுதினால்
1) நூல்ப்பெருமை 2) நூட்பெருமை 3) நூட்பெருமை 4) நூற்பெருமை

18) ஐயோ! அவனுக்கு நடந்தகொடுமையை என்னென்பது இது எவ்வகை வாக்கியம்
1) கூற்றுவாக்கியம் 2) உணர்ச்சி வாக்கியம்
3) வினாவாக்கியம் 4) ஏவல் வாக்கியம்

19) பின்வருவனவற்றுள் பயனிலை மறைந்து நிற்கும் வாக்கியம் எது?
1) அறணை கடித்தால் மரணம் 2) இளங்கன்று பயமறியாது
3) நாடு போற்ற வாழ வேண்டும் 4) பணம் மட்டும் வாழ்க்கை இல்லை

20) வானக்கடலிடை வெண்ணிலாவே வானக்கடல் என்பதிலுள்ள அணி
1) உவமை 2) உருவகம் 3) தற்குறிப்பேற்றம் 4) தன்மை நவிற்சி

21) எருதின் பெண்பாற் பெயர் பசு என்பது போல கலையின் பெண்பாற் பெயர்
1) பிணா 2) கடுவன் 3) மந்தி 4) பிணை

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க?

22) இலங்கையில் பல தமிழ்ப்பத்திரிகைகள்
1) வெளியிடப்படுகிறது 2) வெளிவருகின்றன
3) வெளியீடாகின்றன 4) வெளியிடப்படுகின்றன.

23) நீ கவனமாகப் படித்தாயானால் பரீட்சையில்
1) சித்தியடையவீர் 2) சித்தியெய்துவீர்
3) சிதியடைவாய் 4) சித்தி பெற்றுள்ளாய்

24) நாம் எல்லோரும் எமது தாய் மொழியில் பற்றுள்ளவர்களாக
1) இருக்கின்றோம் 2) இருக்கவேண்டும்
3) இருப்பீர்களாக 4) இருந்தோம்

25) பின்வருவற்றுள் அகச்சுட்டாய் அமைந்த சொல்
1) இவை 2) இவ்வீடு 3) இம்மனிதன் 4) இந்நூல்

26) இலைவகையோ பழவகையோ சத்தானது இதில் ஓகார இடைச்சொல் தந்தபொருள்
1) தோற்றம் 2) எதிர்மறை 3) எண் 4) வினா

27) குளத்தில் நீரெல்லாம் வற்றியது இவ்வாக்கியம்
1) திணை வழுவமைதி 2) இடவழுவமைதி
3) பால்வழுவமைதி 4) எண்வழுவமைதி

28) உடன்பாடாயும் எதிர்மறையாயும் வரத்தக்கதொரு வினைமுற்று
1) பாடாய் 2) பாடுமின் 3) பாடுவாய் 4) பாடேல்

29) என்ரை சொல்லைக்கேட்டு நடவுங்கோ என்ற வாக்கியத்தின் திருந்தியவடிவம்
1) என்றை சொல்லைக்கேட்டு நடவுங்கள்
2) என்டை சொல்லைக்கேட்டு நடவுங்கோ
3) என்னுடைய சொல்லைக்கேட்டு நடவுங்கள்
4) என்ரை சொல்லினைக் கேட்டு நடவுங்கோ

30) பின்வருவனவற்றில் இயல்புப் புணர்ச்சியாக வருவது எது?
1) கடலலை 2) பற்பொடி 3) மரவேர் 4) நாட்டுப்பற்று

31) பின்வரும் செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக?

ஓடி வருகையிலே கண்ணம்மா
உள்ளங் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் உன்னைப்போல்
ஆவி தழுவுதடி

கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா
உன்மத்தமாகுதடி

உன் கண்ணில் நீர் வடிந்தால் என்நெஞ்சில்
உதிரங் கொட்டுதடி
என் கண்ணிற் பாவையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ

31) இப்பாடல்களில் கூறப்படும் செயல்கள் பெற்றவருக்கு எவ்வகை உணர்வை ஏற்படுத்துகின்றன.
1) கவலை 2) மகிழ்வு 3) அச்சம் 4) வியப்பு

32) ஆவிதழுவுதல் என்பதன் பொருளாக அமைவது
1) உணர்வில் ஒன்றுதல் 2) உயிரைத் தழுவுதல்
3) உயிர்பிரிதல் 4) உயிரைப் பிடித்தல்

33) என் கண்ணில் பாவையன்றோ இதில் வந்துள்ள அணி
1) உருவகம் 2) உவமை 3) மடக்கு 4) சிலேடை

34) என்நெஞ்சில் உதிரங்கொட்டுதடி இது எதனைக் காட்டுகின்றது.
1) கவலையை 2) கோபத்தை
3) தீவிர அன்பு காரணமாக ஏற்படும் வேதனை 4) இரத்தம் சிந்துவதை

35) "குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவிப்பாசப் பழி முதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க" என்னும் பாடலில் பாசப்பழி முதல் என்பதைக் குறிக்கும் பொருள்
1) பாசம் பழி முதலைப் பறிப்பவா
2) பாசப் பழிமுதலை அடியோடு பறிப்பவர்
3) பழியை அடியோடு அழிப்பவர்
4) பாசப், பழி, முதல் என்பவற்றை அபகரிப்போர்

36) கோடுறுங் குபிரர் மன்னன் கொலையின் மேற்கருதி நின்றான் இங்கு கோடுறும் என்னும் சொல் குறிக்கும் பொருள்
1) நெறி தவறிய 2) மறுக்கும் 3) நமுறுது 4) நிராகரிப்போர்

37) ஜென்மநாள் தொடங்கியான் செய்த தீவினை
என் முதுகு உழுக்குறலிறுத்த தாற் புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற் கிடங்கிடை
அம்மையிலமிழ்ந்து மென்றஞ்சு கின்றனன் - என்னும்
பாடல் புலைக் கன்மிகள் என்னும் பொருள்
1) தீயவர்கள் 2) புலைத் தன்மையுடைய பாவக்கர்மிகள்
3) அக்கினிக்கடல் 4) பாவிகள்

38) மந்திரப் போருப்பால் வேலை கலக்கினான் மைந்தன் இதில் வேலை கலக்கினான் என்பதன் கருத்து
1) இரண்டாம் வேற்றுமைத் தொகை 2) இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
3) ஆகுபெயர் 4) வினையாலணையும் பெயர்

39) பிறவினை விகுதிபெறாமல் பிறவினையாய் அமைந்த சொல்
1) நடந்தான் 2) பயிற்றினான் 3) அலைந்தான் 4) கற்பித்தான்

40) ஒழுங்கின்றி அமைந்துள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.
அ) அக்குணங்களை ஆள்பவர் ஆண்மையுடையோர்
ஆ) சான்றாண்மை உள்ளவரே சான்றோர்.
இ) அக்குணங்களில் எதுவும் தன்னைவிட்டுப் பிரிந்து போகாமல் அடக்கி ஆண்டு வருபவர் சான்றாண்மை உடையோர்
ஈ) ஒழுக்கத்தை உயிரிலும் பெரிதாகக் கருதுவது நற்குணங்களில் ஒன்று
உ) நற்குணங்கள் பலவற்றைப் படைத்தோர் நல்லேன்
1) இ, ஆ, அ, உ, ஈ 2) உ, அ, ஈ, ஆ, இ 3) இ, அ, ஈ, உ, ஆ 4) இ, உ, ஆ, ஈ, அ

## பகுதி II

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

அ. இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி நமது முன்னோர்கள் வாழ்ந்த முறைகள் அவர்களது வாழ்க்கை மாற்றங்கள் நமது வாழ்வை வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதே போல் எமது வாழ்க்கை முறையும் வாழ்வியல் அநுபவங்களுமே எதிர்கால சந்ததியினருக்கு களம் அமைத்துக்கொடுக்கின்றன. இதனால் காலத்திற்கு காலம் இலக்கியங்கள் தோன்ற வேண்டியது அவசியம் ஆனால் இன்றைய சமுதாயம் நாகரிக மோகத்திற்கு உட்பட்டு தன் நிலை மறந்து எழுத்தாளர்களையோ இலக்கிய படைப்பாளியையோ ஊக்குவிப்பதோ, மதிப்பதோ கிடையாது. இப்படிப்பட்ட சூழலில் ஓர் இலக்கிய படைப்பாளி தனது மனக்குமுறலில் அவர் கூறும் தன்வரலாறு.

ஆ) இயற்கை வளங்கள் தான் நாட்டினுடைய வளர்ச்சி பாதைகளை தீர்மானிக்கின்றன. அந்த வகையில் இயற்கை அன்னை நமக்கு பல்வேறு வளங்களை எமக்கு உவந்தளித்துள்ளால் இதனை நாம் பயன்படுத்துவதோடு மட்டும் அமையாது. எதிர்கால சமுதாயத்திற்காக பாதுகாக்க வேண்டியுள்ளது. நீர் மேற்கொண்ட கல்விச்சுற்றுலாவில் இயற்கை அன்னை உவந்தளித்தவற்றில் உமது மனதை ஆக்கிரமித்தவை பற்றி ஓர் வருணனை கட்டுரை வரைக.

இ) இன்று உலக நாடுகள் அனைத்திற்கும் மின்சக்தி ஒருபாரிய சவாலாக அமைந்துள்ளது. உலக நாடுகள் அனேகமானவை இதற்கு பல்வேறு வழிகளில் நம்நாட்டுக்கேற்ற வகையில் வழிவகைகளை ஆராய்ந்து அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதற்கு இலங்கை மணித்திருநாடு விதி விலக்கான ஒன்றல்ல.
சர்வதேச சமூகம் அணு உலை மூலம் அனு சக்தியை உச்சளவில் பயன்படுத்த முனைகிறது நாம் வெறுமனே நீர் மின்சாரத்தை மட்டும் எதிர்பார்த்து வினைத்திறனை அதிகரிக்க முடியாது. இதற்கு தீர்வாக இன்று முன்வைக்கப்பட்டிருக்கும் அனல் மின் நிலையம் எமது நாட்டிற்கு எந்தளவு பொருத்தப்பாடுடையது என்ற கருப்பொருளில் ஓர் கட்டுரை வரைக.

ஈ) மாணவர்களினுடைய கல்வி மட்ட அடைவுகள் வெறுமனே புத்தக் கல்வியில் மட்டும் தங்கியிருக்கவில்லை இவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது புத்தகக் கல்வியுடன் இணைந்த அநுபவக்கல்வி. அந்த வகையில் தமிழ் மொழித்தினம், ஆங்கிய மொழித்தினம், விளையாட்டுப் போட்டி போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவர் கல்வியில் கணிச மான பங்காற்றுகின்றது. இது தொடர்பாக உமது பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் ஆற்றிய சொற்பொழிவு.

உ. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" எனும் பழமொழியின் பொருளை விளக்கும் வகையில் உள்ளத்தை ஈர்க்கும் ஓர் கற்பனைச் சிறுகதை வரைக.

02. கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ, ஈ எனும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை15-20 சொற்களில் அமையுமாறு வேறு வேறாக எழுதுக.

அ. இற்றைக்கு சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் தரணியில் வாழ்ந்த தலைசிறந்த தெய்வப் புலவரான திருவள்ளுவரால் இயற்றப்பட்ட நூல் திருக்குறள். நூலாசிரியரின் அறிவு நுட்பத்திற்கு அவர்தம் குறட்பாக்களே சான்று பகிர்கின்றன. திருக்குறள் எழுசீர்களைக் கொண்ட குறள் எனும் யாப்பிலே அமைந்துள்ளது. இந்த யாப்பிலே பாடுவது மிகக் கடினம், வள்ளுவரோ இவ்வரிய செயலிலே ஈடுபட்டு உயர்ந்த கருத்துக்களை குறுகிய பாவிலே கவிதை நயம்பெறக் கூறியிருத்தல் வியந்து போற்றுதற்குரியது. வள்ளுவருக்கு முன்னும் பின்னும் பல நூலாசிரியர்கள் வட மொழியிலும் தமிழிலும் இருந்தனர். எனினும் அன்னார் புகழொளியெல்லாம் வானத்து விளங்கும் விண் மீன்களாக வள்ளுவர் கீர்த்தி அவற்றிடை திகழும் வான் மதி போல திகழ்வதாகும்.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

2006 ஏப்ரல்

வெளியீடு 01


# மாதிரி வினாப்பத்திரம்

## பௌதிகவியல்

R.குமரன் B.Sc st.Henry's college யாழ்.

பௌதிகவியல் I 09.03.2006ஆம் திகதி கல்விச்சுடரில் வெளியாகியிருந்தது. அதன் பகுதி II இங்கு பிரசுரமாகின்றது.

1. படத்தில் காட்டப்பட்ட விமானம் (aeroplane) $90ms^{-1}$ ல் கிடையாக பறந்து கொண்டிருக்கின்றது. இவ்விமானம் 500kg கூடை (Crate) ஒன்றை கிராமம் ஒன்றிற்கு அவசரநிலைமைக்காக வழங்குகிறது. கூடை பழுதடைவதை தடுப்பதற்கு அது நிலத்தை அடைகையில் இருக்கக் கூடிய உயர் நிலைக்குத்து கதி $36ms^{-1}$ ஆகும்.
சுயாதீன ஆர்முடுகல் $g = 9.8ms^{-2}$





a) வளித்தடையானது புறக்கணிக்கத்தக்கது என்க.
i. கூடை விழவிடப்படக் கூடிய அதி உயர் உயரம் யாது?
ii. இவ்வுயரத்திலிருந்து கூடை விழவிடப்படின் தரையை அடைய எடுக்கும் நேரம்?
iii. பகுதி (i),(ii) விடைகள் கூடையின் திணிவில் தங்காது ஏன் என விளக்குக?
iv. கூடையானது தரையில் குறித்தவொரு புள்ளி X ல் தரையிலிறக்க (land) வேண்டியுள்ளது. இக் கூடை அனுமதிக்கத்தக்க உயர் உயரத்திலிருந்து விடுவிக்கப்படும் போது X இலிருந்து விமானம் (aeroplane) இனது கிடை தூரம் யாது?

b) கூடை தரையை அடைகையில் அதன் கதி 97m/s எனின்
i. நிலத்தை அடைகையில் கூடையின் இயக்க சக்தி?
ii. பகுதி a (i) ல் உள்ள உயரத்திலிருந்து கூடை விழவிடப்படின் ஈர்ப்பழுத்த சக்தி இழப்பு?

c) நடைமுறையில் வளித்தடையானது புறக்கணிக்கமுடியாது. நடைமுறையில் a(i),a(ii) விடைகள் எவ்வாறு அதன் உண்மைப் பெறுமதியிலிருந்து மாறுபடும் என விளக்குக.

d) விமானம் (aircraft) ஆனது நிறுத்தும் கம்பித் தொகுதியில் (arrester lnive system) விமானத்தாங்கியின் மேல் (deck) ஓய்வுக்கு கொண்டு வருவதை படம் காட்டுகிறது.




விமானத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள கொழுக்கி ஒன்றின் மீது விமானம் அமர்முடுக்கப்படுகிறது. A இலும் B இலும் உள்ள நிறுத்தும் கம்பித் தொகுதியால் விமானம் மாறா அமர்முடுகலில் பேணப்படுகிறது. கீழுள்ள படம் அமர்முடுகலின் போது கம்பிகளின் நிலையை காட்டுகிறது.

i. விமானத்திணிவு $2.8 \times 10^4$kg அதன் சீர் அமர்முடுகல் $20ms^{-2}$ ம் எனின் இழுவை T ஐ காண்க?
ii. நிறுத்திக்கம்பி (arrester wire) உற்பத்தியின் போது கம்பியானது 0.15m நீட்சி அடையுமாறு பரிசோதிக்கப்படுகிறது. இந்நிலையில் கம்பியில் இழுவை = 290kN எனின் கம்பியில் சேமித்த சக்தியை காண்க?
iii. விமானத்தைக் கிளம்பச் செய்யும் இயந்திரத்தில் இருந்து விமானம் ஒன்று கிளம்பச் செய்யப்பட அது 62m ல் $71ms^{-1}$ வேகம் அடையின் விமானத்தின் ஆர்முடுகல் யாது?


e) மட்டமான பாதைப்பறப்பில் (level flight) விமானி வடக்கு நோக்கி $80ms^{-1}$ செலுத்துகிறார். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி 20m/s ல் காற்று வீசின் விமானத்தின் விளையுள் வேகம் யாது?

2. a) கீழுள்ள படம் கண்ணாடிச் சாடியினுள்ளே அதிர்ந்து கொண்டிருக்கும் மணி (bell) ஒன்றை காட்டுகிறது.சாடிக்கு வெளியே உள்ள மனிதன் ஒருவனுக்கு மணி ஒலியை கேட்க முடிகிறது



(i) இவ் ஒலி எவ்வாறு கடத்தப்படுகிறது என்பதை விளக்குக?
(ii) தற்போது வெற்றிடப்பம்பி மூலம் சாடியின் உள்ளே உள்ள வளி அகற்றின் அவ் ஒலி கேட்குமா? விளக்குக?

b) பூமிக்கு அடியில் உள்ள பாறைப் படையை ஆராய பூமி மேற்பரப்பில் வெடிப்பு (explosion) ஒன்று உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பை படம் காட்டுகிறது.





இவ்வெடிப்பால் உண்டான ஒலி பாதை (1), பாதை (2), பாதை (3) [தெறிப்பு] மூலம் உணரியை அடையலாம். புாதை (4) இனூடு ஒலி பாறைக்குள் ஊடுருவி செல்கின்றது.

உணரியை ஒலி அடைய எடுத்த நேரங்கள் கீழ் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பாதை | பாதை (1) | பாதை (2) | பாதை (3) |
|---|---|---|---|
| முதலில் இருந்து உணரியை ஒலி அடைந்த நேரம் (Sec) | 0.100 | 0.020 | 0.300 |

(i) பாதை (2) இனூடு செல்லும் ஒலி ஏன் முதலில் உணரியை அடைகிறது என விளக்குக.
(ii) வளியில் ஒலியின் கதி = 320m/s எனின் முதலுக்கும் உணரிக்கும் இடைப்பட்ட தூரம் யாது?
(iii) பகுதி (ii) ஐ பயன்படுத்தி பூமியில் ஒலியின் வேகத்தை காண்க?
(iv) ஒளி போன்று ஒலியும் தெறிப்படையவும் முறிவடையவும் கூடியது. பாதை (5) வழியே செல்லும் ஒலி முழுவுட் தெறிப்படைகிறது.
1-முழுவுட்தெறிப்பு என்பதால் நீர் கருதுவது யாது?
2-பூமியை காட்டிலும் மேற்குறித்த பாறையில் ஒலியின் வேகம் கூடியது என்பதை எவ்வாறு நியாயப்படுத்துவீர்?

உ) மேற்குறிப்பிட்ட அலைகளின் பயன்பாடு தவிர கழிஒலி, x கதிர்கள் மனிதஉடலின் உள் அமைப்பு பற்றிய தகவல்களை அறிய பயன்படுகிறது. கழிஒலி என்பது மனிதனால் கேட்கக்கூடிய அதிஉயர் மீடிறனை காட்டிலும் உயர் மீடிறனை உடைய அலை x கதிர்கள் கட்புல ஒளியை காட்டிலும் உயர்வான மீடிறனை உடைய மின்காந்த திருசியம் ஆகும். கீழுள்ள படமானது வயிற்றில் உள்ள சிசு ஒன்றினைப் பற்றி படிப்பதற்கு கழி ஒலிக்கதிர்கள் பயன்படுவதை காட்டுகிறது.





(i) எல்லா மின்காந்த அலைகளுக்கும் பொதுவான இயல்புகள் 4 தருக.
(ii) கழிஒலி முதலில் இருந்து வெளியேறும் அதிர்வுகள் எவ்வாறு உடல் இழையங்களினூடு கடத்தப்பட்டு உணரியை அடைகின்றது என விளக்குக?
(iii) மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் கழிஒலி கதிர்கள் மனிதனால் உணரக்கூடிய அதிஉயர் மீடிறனின் 100 மடங்கை உடையன எனின் மனித உடலில் அவ்வலையின் அலைநீளத்தைக் காண்க. (மனித உடலின் கழிஒலி அலையின்வேகம் = 1500m/s)

3. மனிதக்காது தொடர்பான சிலவிபரங்கள் பின்வரும் பந்தியில் தரப்பட்டுள்ளன. அப்பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
மனிதக்காது மிகச்சிறப்பான வகையைச் சேர்ந்த ஓர் ஒலி உணரி என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒலியினது வலுவானது 0.1W இல் இருந்து 1Wஆக உயரும் போதும் 1W இலிருந்து 10Wஆக உயரும் போதும் ஒரே விளைவையே உணருகிறது. அதாவது மனிதனது காதானது வலுக்களின் வித்தியாசத்தை அன்றி அவற்றினது விகிதங்களையே உணருகின்றது.

ஆகவே ஒலிமுதல் ஒன்றினது வலு $P_1$ இருந்து $P_2$ இற்கு மாறும் போது தெசிபல் மாற்றத்தின் எண்ணிக்கை. $dB=10 \log P_1/P_2$ என் வரையறுக்கப்படும். காது தொடர்பாக பௌதீகவியல் ரீதியில் ஆய்வு செய்யும் விஞ்ஞானிகள் தொடர்ச் செறிவு மட்டத்தைப் () பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.


$$\beta \text{ (தெசிபல்)} = 10 \log(I/I_o)$$

இங்கு I என்பது கருதப்படும் ஒலி அலைச் செறிவாகும். $I_o$ என்பது சாதாரணமாக மனிதக்காதினால் உணரக்கூடிய இழிவு ஒலிச்செறிவாகும். வளியில் ஏற்படும் ஒலி அதிர்வுக்கான $I_o=10^{-12}Wm^{-2}$ எனக் கருதப்படும். இப்பெறுமானம் கேள்தகமை நுழைவாய் எனவும் அழைக்கப்படும். $I=1Wm^{-2}$ ஆன ஒலி அதிர்வுகளால் காதில் நோ ஏற்படத் தொடங்குவதால் இது நோ நுழைவாய் என அழைக்கப்படும். இவ்வாறு தொடர்ச்சி செறிவு மட்டம் மடக்கைகளில் வரையறுக்கப்படுவதால் ஏற்படும் தன்மைகள்.
1) மனிதன் செவிமடுக்கக் கூடிய ஒலிச்செறிவு இங்கு ஏகபரிமானமானது.
2) கணித ரீதியில் மிகவும் இலகுவானது.
ஆனால் கேள்தன்மை நுழைவாய் மாறும் பெறுமானத்தில் காணப்படும். அது காதினால் செவிமடுக்கப்படும் மீடிறனில் தங்கியுள்ளது. 150H7 தொடக்கம் 9kH7வரையிலான வீச்சினுள் கேள்தகைமை நுழைவாய் வேறுபடும் விதம் கீழே தரப்பட்டள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. கிடைஅச்சில் மீடிறன் (f) ஆனது (kH7) இலும் நிலைக்குத்து அச்சில் தொடர்பு செறிவு மட்டம் β(தெசிபல்) இலும் காட்டப்பட்டுள்ளன




1) காதுபற்றிக் கற்கும் போது தொடர்புச் செறிவு மட்டம் βஆனது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மடக்கை (log) மாறிவடிவில் வரைவிலக்கணப்படுத்தித் தருவதன் தேவையையும் அதனால் கிடைக்கும் நன்மையையும் தருக?
2) ஆலைகளின் செறிவு $1 \times 10^{-5}W m^{-2}$ ஆக உள்ள இடத்தில் தொடர்பு மட்டம βவைக் காண்க.
3) பின்வருவனவற்றைக் கணிப்பதற்கு வரைபினைப் பயன் படுத்துக.
a) βவினது பெறுமானம் பூச்சியம் ஆகும் அதிர்வெண் அண்ணளவாக எவ்வளவாகும்?
b) 6kH7 அதிர்வெண்ணுடைய அலை ஒன்றினை மனிதக்காது உணரத்தக்க ஒலியின் இழிவுச்செறிவு யாது?
c) 1kH7மீடிறன் கொண்ட அலைகளை அதன் செறிவு $1 \times 10^{-9}Wm^{-2}$ஆக இருக்கும் போது சாதாரணமான ஒருவருக்குச் செவிமடுக்க முடியுமா முடியாதா காரணம் தருக
2kH7 அதிர்வெண் உடைய ஒலியை காலும் முதலானது 10Wவலுவைக் காலுகிறது. இவ்வொலியின் சுரத்தை ஆகக் கூடுதலாக எத்தூரத்தில் உள்ளவர் உணரலாம்?

4.



மேலே காட்டப்பட்ட படமானது 8000V அழுத்தத்திற்கு ஏற்றப்பட்ட 20mm ஆரையுடைய கடத்தும் கோளத்தையும் அதனைச் சுற்றியுள்ள சம அழுத்தக் கோடுகளையும் குறிக்கின்றது. 2000V அழுத்தத்திற்கு கூடிய அழுத்தக் கோடுகள் ஒவ்வொன்றும் 1000V ஆகவும் 2000V அழுத்தத்திற்கு குறைந்த அழுத்தகோடுகள் ஒவ்வொன்றும் 100V ஆகவும் காட்டப்பட்டுள்ளன. இக்கோளமானது மற்றைய பொருட்களில் இருந்து தொலைவில் உள்ளது.

(i)கோளத்தில் உள்ள ஏற்றம் நேரானதா? மறையானதா? காரணம் தருக.
(ii)B இலிருந்து A இற்கு 8.0nC ஏற்றத்தைக் கொண்டு செல்வதற்கு தேவையான சக்தி யாது?
(iii)B இலிருந்து C இற்கு 6.0nC ஏற்றத்தைக் கொண்டு செல்வதற்கு தேவையான சக்தி யாது? காரணம் தருக.
(iv) a)D இற்கும் E இற்கும் இடையிலான அழுத்த வேறுபாடு யாது?
b)E இலிருந்து D இற்கு 1.0nC ஏற்றத்தைக் கொண்டு செல்வதற்குத் தேவையான சக்தி யாது?
c)E இற்கும் D இற்கும் இடையில் 1.0nC ஏற்றம் உள்ள போது அதன் மீது தொழிற்படும் சராசரி விசையைக் கணிக்க.
d) E இற்கும் D இற்கும் இடையிலான மின்புல வலிமையைக் கணிக்க
e) கோளத்தின் மீதுள்ள ஏற்றத்தைக் கணிப்பதற்கு பகுதி (d)ல் பெறப்படும் உமது விடையைப் பயன்படுத்துக.


(1/4 πεo=9 x 10 9Nm-2)

(v)முதலாவது கோளத்திற்கு ஒத்த ஏற்றத்தைக் கொண்ட சர்வசமனான இன்னொரு கோளமானது இரண்டு கோளங்களின் மையங்களிற்கு இடைப்பட்ட தூரம் 80mm ஆகுமாறு அண்மையில் கொண்டுவரப்படுகிறது.
a) இரண்டு கோளங்களிற்கும் இடையே நடுப்பகுதியில் உள்ள புள்ளியில் உள்ள அழுத்தம் யாது?
b) 1.0V அழுத்தம் உருவாகும் நிலை கோளங்களிலிருந்து எவ்வளவு தூரத்தில காணப்படும்?

**5. பகுதி (a) யிற்கு அல்லது (b) யிற்கு மட்டும் விடை தருக.**

(a) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் அவற்றுடன் மோதுகைக்கு உட்படும் சிறிய கோள்களை மீண்டும் தப்ப முடியாவண்ணம் தம்முடன் இணைத்து கொள்வதன் மூலம் வளர்ச்சி அடைகின்றன. இக்கொள்கையின் அடிப்படையிலேயே கீழ்வரும் வினா அமைந்துள்ளது.
இக் கொள்கையின் எண்ணக்கருவானது ஓர் கோளுடன் (Planet) மோதும் சிறிய கோளானது (asteroid) மோதுகையின் பின் தப்பமுடியாது என்பதை அடிப்படையாக கொண்டது.


a) ஓர் கோளின் மேற்பரப்பிலுள்ள ஈர்ப்பு அழுத்தத்துக்கு ஓர் கோவையையும் அதன் அலகையும் தருக. ( திணிவு -M கோளின் -R அகிலஈர்ப்புமாறிலி (G)
b) கோள் ஒன்றின் மேற்பரப்பிலிருந்து ஆரை வழியான தூரத்துடன் ஈர்ப்பு அழுத்தம் மாறுபடுவதைக் காட்டும் வரைபை வரைக.
c)மேறகூறப்பட்ட கொள்கையின் அடிப்படையில் இத்தகைய கோள் ஒன்றுடன் மோதும் m திணிவுடைய சிறிய கோள ஒன்று மோதுகையின் பின் தப்ப வேண்டுமாயின் அதற்கு இருக்க வேண்டிய ஆக குறைந்த வேகம் Vesc




$Vesc = \sqrt{\frac{2GM}{R}}$ இனால் தரப்படும் என காட்டுக.

d) i.ஒரே அடர்த்தியையும் வேறுவேறான ஆரைகள் R ஐயும் உடைய கோள்களிற்கு Vesc ஆனது அவற்றின் ஆரை R இற்கு நேர்விகித சமனானது என காட்டுக.
ii.புதன் கிரகத்தினது ஆரை $R=2.4\times10^{6}m$, அடர்த்தி $5.4\times10^{3}kgm^{-3}$ எனத் தரப்படின் அக்கோளிற்கான Vesc இணைக் காண்க. மேலும் அதே அடர்த்தியையும், R =1000m இனையும் உடைய கோள் ஒன்றிற்கான Vesc இனை உய்த்தறிக.

e) ஓர் சிறிய கோளானது (A) தரப்பட்ட கோள் P யிலிருந்து மிகத தூரத்தில் உள்ள போது அது கொண்டுள்ள வேகம் $V_{far}$ ஆகவும் மோதும் தறுவாயில் அது கொண்டுள்ள வேகம் $V_{col}$ ஆகவும் இருப்பின் $V_{col}>V_{far}$ ஆக இருககும். இதற்கான காரணத்தை விபரிக்குக. அத்துடன் $V_{col}2 = V_{far}2+V_{esc}2$ எனக் காட்டுக.




f) கோள் ஒன்றின் தப்பு வேகம் $3000ms^{-1}$ எனின், கோளின் மேற்பரப்பிலிருந்து 5000m/s வேகத்தில் எறியப்படும் துணிக்கை கொண்டுள்ள முடிவு வேகம் யாது?

g) வளியற்ற கோள் ஒன்றின் மேற்பரப்பிலிருந்து அதன் தப்புவேகத்துடன் ஓர் துணிக்கை A யும், தப்புவேகத்திலும் கூடிய வேகத்துடன் துணிக்கை B யும் மேற்பரப்பிற்கு செங்குத்தாக ஒரே நேரத்தில் வெளிநோக்கி எறியப்படின் இரு துணிக்கைகளின் கதி, நேரத்துடன் மாறுபடுவதை ஒரே வரிப்படத்தில் பருமட்டாக வரைக.

(b) a) ஒரு நற ஒளியானது குறித்தவொரு உலோகத்தட்டில் படும் பொழுது இலத்திரனகள் வெளிவிடப்படுகின்றன.ஒளியின் செறிவு அதிகரிக்கப்படும் போது பின்வருவனவற்றை விளக்குக.
ii.வெளிவிடப்படும் $e^{n}$ களின் உயர் இயக்கசக்தி மாற்றமடையாது.
iii.1Sec ல் வெளிவிடப்படும் $e^{n}$ களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

b) பொட்டாசிய உலோகம் ஒன்று $5.10\times10^{-7}m$ அலைநீளமுடைய ஒளியால் ஒளிர்ப்படுத்தப்படுகிறது. பொட்டாசியத்தின் வேலைச் சார்பு $= 3.58\times10^{-19}J$
i.படும் ஒளியின் அதிர்வெண் $6\times10^{14}Hz$ எனக் காட்டுக?
ii.படும் Photon ன் சக்தியை J ல் தருக?
iii.வெளிவிடப்படும் $e^{n}$ ன் உயர் இயக்கசக்தியை கணிக்க?
iv.கீழ வரும் அட்டவணை 4 உலோகங்களுக்கான வேலைச்சார்பைத் தருகிறது.

| உலோகம் | வேலைச்சார்பு/ $(J)\times10^{-19}$ |
|---|---|
| Cs | 3.04 |
| Ag | 7.57 |
| Na | 3.94 |
| Ta(தங்குதன்) | 7.33 |


மேற்கூறிய உலோகங்களில் $5.10\times10^{-7}m$ அலைநீளமுடைய ஒளியால் ஒளிர்ப்படுத்த $e^{n}$ கள் வெளிவிடப்படும் உலோகங்கள் யாவை?

c) ஒளி மின்விளைவானது பின்வரும் சமன்பாட்டால் தொடர்புபடுத்தப்படும்.

$$hf = \Phi + E_k$$

இச்சமன்பாட்டில் உள்ள கணியங்களை பெயரிட்டு இச்சமன்பாட்டில் அவை குறிக்கும் விதத்தை விளக்குக.

d) கீழே காட்டிய ஒளிமின்விளைவு உபகரணத்தில் படும் புற ஊதா கதிர்ப்பின் அலை நீளம் 220nm ம் மின்னோட்டம் 2.0μA ம் ஆகும்.




i.அலைநீளத்தை மாற்றாது படும் கதிர்ப்பின் செறிவை 2 மடங்காக்கின் மின்னோட்டத்தின் பெறுமதி யாது? இங்கு மேற்கொண்ட எடுகோளை குறிப்பிட்டு உமது விடையை விளக்குக?
ii.தற்போது படும் கதிர்ப்பின் அலை நீளம் 350nm ஆக அதிகரிக்க மின்னோட்டம் =0 ஆகிறது. நுழைவாய் அதிர்வெண்ணையும் வேலைசார்பையும் காண்க.

6. a) மேற்பரப்பிழுவிசைக்குரிய வரைவிலக்கணத்தை மேற்பரப்பு சக்தியின் அடிப்படையில் தந்து அதன் வரையலகையும் தருக.


சவர்க்காரக் கரைசல் ஒன்றின் மேற்பரப்பிழுவை r ஆரையுடைய சவர்க்காரக் குமிழியை வெப்பநிலை மாறாது 3r ஆரையுடைய சவர்க்காரக் குமிழியாக ஆக்குவதற்கு செய்ய வேண்டிய வேலை யாது?
உமது கணிப்பின் எடுகோள் என்ன?

b) மேற்பரப்பிழுவைக்கான அளவறிரீதியான வரைவிலக்கணத்தைத் தந்து அதன் வரையலகையும் தருக.
குமிழ்களில் அமுக்க மிகைக்குரிய கோவையைத் தந்து குறியீடுகளை இனங்காண்க.
உள்விட்டம் 3.00mm ஆரையுடைய இரசப்பாரமானியில் அவதானிக்கப்பட்ட வாசிப்பு 76.56cm. மேற்பரப்பிழுவையினால் ஏற்படும் வழுவை கருத்தில் கொண்டு உண்மை வாசிப்பைத் தருக.
*(இரசத்தின் மேற்பரப்பிழுவை = $4.80\times10^{-1}Nm^{-1}$ கண்ணாடிக்கும் இரசத்திற்குமான தொடுகைக் கோணம் $=140^{0}$ இரசத்தின் அடர்த்தி = $13.6\times10^{3}kgm^{-3}$)*


c) 6.0cm x 1.5cm x 0.20cm பரிமாணங்களை உடைய நுணுக்குக்காட்டி வழுக்கி ஒன்று அதன் முகம் நிலைக்குத்தாகவும் நீளப்பக்கம் கிடையாகவும் இருக்க நீரில் அதன் கனவளவின் அரைப்பங்கு அமிழ்ந்திருக்குமாறு தொங்கவிடப்பட்டுள்ளது. வழுக்கியின் தோற்ற நிறை வளியில் அதன் உண்மை நிறைக்கு சமனாகக் காணப்பட்டது. எனின்
i.குறித்த நிகழ்வில் கண்ணாடி வழுக்கியில் தாக்கும் விசைகளை படமொன்றின் உதவியுடன் குறித்துக் காட்டுக.
ii.நீரின் மேற்பரப்பிழுவையைக் கணிக்க.
*(தொடுகைக் கோணம் O எனக் கருதுக. நீரின் அடர்த்தி = $1000kgm^{-3}$)*

2cm ஆரையுடைய மெல்லிய வட்ட வளையம் ஒன்று சராசரித் தடம் கிடையாக இருக்குமாறு மையத்தில் சுழலிடத்தைக் கொண்ட மீற்றர் கோலின் 5cm அடையாளத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. கோலைச் சமன் செய்ய 70cm அடையாளத்தில் 5g நிறைப்படி தொங்கவிடப்பட்டுள்ளது. வளையத்துடன் திரவ மேற்பரப்பொன்றைத் தொடச் செய்து தொகுதியை மீண்டும் சமநிலைக்குக் கொண்டு வர நிறைப்படியை 80cm அடையாளத்திற்கு நகர்த்த வேண்டி இருந்ததாயின் திரவத்தின் மேற்பரப்பிழுவையைக் காண்க.

7.a)





படம் ஆனது மூவாயி விரியலாக்கிச் சுற்றைக் காட்டுகிறது.
i. சேகரிப்பான் அழுத்தம், மின்னோட்டம் முறையே 3V,6mA ஆயின் carphone இற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாட்டையும் அதன் தடையையும் காண்க.
ii. ஓட்ட விரியலாக்கம் β= 60 எனின், அடி மின்னோட்டம் யாது?
iii. அடி மின்னோட்டம் வரைபில் காட்டியவாறு microphone இனால் மாற்றப்படின் earphone இற்குக் குறுக்கேயான அழுத்த வேறுபாடு மாறுபடுவதைக் காட்டும வரைபினை அளவிடைகளுடன் வரைக.




iv. காட்டப்பட்ட விரியலாக்கியில் பெய்ப்பிற்கும் பயப்பிற்குமான அவத்தை வித்தியாசம் யாது?
v. குறித்த மூவாயியின் பெய்ப்புத்தடை 2000Ω ஆயின் விரியலாக்கியின் வலு நயம் யாது?

b)




படமானது சிலிக்கனாலான மூவாயி ஒன்று உணர்திறன் ஆளிச் சுற்றில் பயன்படுவதைக் காட்டுகிறது.
i. மூடப்பட்ட நிலையில் ஆளிச் சுற்று இருப்பதற்கு தேவையான அடிகாலி அழுத்த வேறுபாடு ($V_{BE}$) யாது?
ii. ஆளி மூடப்பட்ட நிலையில் $R_1$ இற்குக் குறுக்கேயான அழுத்த வேறுபாடு ஊடான மின்னோட்டம் என்பவற்றைத் தருக.
iii. ஆளிச் சுற்றின் நிரம்பிய நிலையில் $R_2$ ஊடான மின்னோட்டம் அண்ணளவாக யாது?
iv. மூவாயியின் ஓட்ட விரியலாக்கம் (β/hFE) இனைக் கணிக்க. கணிப்பில் நீர் பயன்படுத்திய எடுகோள் யாது?
v. மேலே உள்ள ஆளிச்சுற்று எப்படலைக்கு ஒப்பானது எனக் கூறி அதன் உணமை அட்டவணையையும் தருக.

**பௌதிகவியல் பகுதி I, II இன் விடைக்குறிப்புகள் 23.03.2006ஆம் திகதிய கல்விசுடரில் வெளிவரும்.**


# அன்பு மாணவர்களே!

கல்விச்சுடர் தொடர்பான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

**கல்விச் சுடர்,**
361, கஸ்தூரியார் வீதி,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

ஆ) கொள்வோன் கொள்கை அறிந்து அவன் உளம் கொளக் கொடுப்பதே பண்டைக்கால கல்வி முறை ஆசிரியன் திண்ணைகளே பள்ளிகளாக அமைந்துள்ளன. நெட்ருப்பண்ணும் முறையிலேயே கல்வியானது வளர்க்கப்பட்டுள்ளது. மாணவர்களது மனநிலை பற்றிக் கருத்துச் செலுத்தப்படவில்லை. காட்சிப் பொருள் துணைப்பொருள் பற்றிய அக்கறை செலுத்தப்படவில்லை. மொழித்திறமையும், சொல்லும், பொருளும் உள்ளத்தில் பதிதலும், நினைவு கூறலும் சிறப்பாக கருதப்பட்டுள்ளது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் கற்பித்தலிலும் நுட்பங்களை புகுத்தியுள்ளது. கற்போரை மையமாக கொண்டு அமைக்கப்பட்ட கல்விமுறை சமூகத்தின் பிள்ளை என்று மாற்றமடைந்து ஆளுமை விருத்தியில், உளவியலில் அதிக கவனம் செலுத்தியது ''கேட்டால் மறந்து விடுவேன், பார்த்தால் ஞாபகம் இருக்கும், செய்து கற்றால் நினைவிருக்கும்''. எனவே வாய்மொழிக் கற்பித்தலை விட செய்முறை கற்பித்தலே கல்வியில் ஆர்வத்தையும், கவர்ச்சியையும் சுய ஈடுபாட்டையும் ஏற்படுத்த தக்க கல்விமுறை ஆகும்.

இ. சிலம்பின் செய்திகளில் ஒன்றாக காணும் கடவுள் சிந்தனையில், சமணத்துறவி இளங்கோவடிகள் என்பதை நிலை நிறுத்தாமல், சமரச சன்மார்க்க சிந்தனையில், அக்கால மக்களின் கடவுட் கொள்கையில், சிறிதும் பிறழாமல் நடுநிலைமையுடன், கண்ணகி கோவலன் கதையில் நிகழும் சம்பவங்களை அனைத்தையும் சங்ககால மக்களின் நடைமுறைக் கொள்கைகளை அடியொற்றி விளக்கியிருப்பது. அவரது சமய பக்கச்சார்பற்ற தன்மையை மிக நன்கு புலப்படுத்துகின்றது. நகர்வளம் பற்றிப் பாடுகையில் அகத்திய முனிவர் வாழும் பொதியமலையையும் பரம்பொருள் எழுந்தருளியிருக்கும் இமய மலையையும் குறிப்பிடுகின்றார். கண்ணகியை திருமகளுக்கு ஒப்பிடுகின்றார். கண்ணகியைக் கோவலன் மறையோன் கூறிய விதிப்படி தீவலம் வந்து மணம் புரிந்து கொண்டான் என்பதால் சங்க கால மக்களின் திருமணக்கிரியை நிறை வான ஒன்று என்று காட்டப்படுகின்றது.

ஈ. பிறவிக் கடலை ஒருவன் தாண்ட வேண்டுமேயானால் அதற்குச் சில அடிப்படையான பண்புகள் தேவை. முதலாவது, யான் எனது என்னும் செருக்கற்ற நிலை அடுத்த படியாக வேண்டப்படும் பண்பு புலனடக்கம் ஆகும். அதை வலியுறுத்த வந்த வள்ளுவப் பேராசன் ''அடல் வேண்டு மைந்தன் புலத்தை விடல் வேண்டும் வேண்டிய வெல்லா மொருங்கு'' என்றும் ''ஒருமையுள் ஆமைபோ லைந்தடக்க லாற்றின் எழுமையு மேமாப் புடைத்து'' என்றும் கூறியவற்றால் அறியலாம். அடுத்துள்ள பண்பு தொண்டு மனப்பான்மையாகும் இதில் முற்றிலுமாக ஈடுபட்டவர்களை இறைவன் ஆட்கொள்கிறான் என்பதை, '' தன் கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற நாவுக்கரசர் வாக்கால் நன்கு அறியலாம்.

03. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அற்றை நாள் சோழப் பேரரசு என்பது இன்று தென் கலிங்கம் என்று சொல்லப்பெறுகிற பீஹாரின் வட பகுதியில் இருந்து கன்னியாகுமாரி வரை பரவியிருந்தது. அது மட்டுமன்று இன்று கர்நாடகம் என அழைக்கப்பெறும் பகுதியும், கேரளம் என்று அழைக்கப்பெறும் பகுதியும் அன்று சோழப் பேரரசனாகிய இரண்டாம் குலோத்துங்கனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என அறிதல் வேண்டும். இப்பேரரசனின் தலைமை அமைச்சராக இருந்த காரணத்தால் நாடு முழுவதையும் பலமுறை சேக்கிழார் சுற்றிப் பாரத்திருக்க வேண்டும். வரலாற்றறிவும், கல்வெட்டு அறிவும் முழுமையாக உடைய பெருமகனார் தமிழகத்தை சுற்றி வந்து பார்க்கையில் சில அடிப்படை உண்மைகளை கண்டுபிடித்தார். மேலோட்டமாக பார்ப்பதற்கு இரண்டாம் குலோத்துங்கனுடைய ஆட்சிக்காலத்தில் சோழ பேரரசு ஒஹோ என்று வளர்ந்திருந்தது என்றாலும் நுண்மாண் நுழை புலனுடைய சேக்கிழாருக்கு இந்த மேலோட்டமான பார்வைக் கடியில் சோழ பேரரசு ஆட்டம் கண்டு விட்டது என்பதை அறிய முடிந்தது. இவ்வாறு அப்பேரரசு ஆட்டம் காண்பதற்கு காரணமாக அமைந்தது எது என்ற ஆராய்ச்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தல் வேண்டும்.

அ) இரண்டாம் குலோத்துங்கனுடைய தலைமை அமைச்சர் யார்?
ஆ) அன்றைய சோழ பேரரசு எதுவரையில் அரசாண்டது.
இ) ஆட்டம் கீண்ட சோழ பேரரசை அமைச்சர் ஆராயக்காரணமாக இருந்த காரணிகள் எவை?
ஈ) இப்பந்தியில் ஆசிரியர் எத்தகைய மனஉணர்வை எம்மிடம் தோற்றுவிக்க முயல்கிறார்.
உ) சோழப் பேரரசை அணி செய்த நீர் அறிந்த இன்னொரு சோழக மன்னனை குறிப்பிடுக.

04. ''சுத்தம் சுகம் தரும்'' என்பது ஆன்றோர் அமுதவாக்கு நீர் வசிக்கும் கிராமத்தில் காணப்படும் சுகாதார சீர்கேடுகளை எடுத்தியம்பி அதற்கான வழிவகைகளை காணும் பொருட்டு சம்பந்தப்பட்ட உள்ளுராட்சி அதிகாரசபை தலைவருக்கு நீர் கிராமதின் நலன் விரும்பி என்பதால் நூறு சொற்களளவில் ஒரு கடிதம் எழுதுக.

## பகுதி III — 2மணித்தியாலம்

1. வங்கினைப் பற்றிப்போதா வல்லுடும்(பு) என்ன நீங்கான்
   அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. யாருக்கு கூறப்பட்டது?
   இ. இக்கூற்று இடம்பெறுவதற்கு காரணமான மலையின் பெயர் என்ன?
   ஈ. வங்கு என்பதன் கருத்து யாது?
2. இமக்குலக் கொடி பாகர்க்கினியவர் தமக்கு இன்அடிசில் தகவுற அமைக்குமாறெ்ங்ன னே அணங்கே
   அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. யாருக்கு கூறப்பட்டது?
   இ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   ஈ.''இமக்குலக்கொடி பாகர்க்கினியவர்'' எனக் குறிப்பிடப்படுவர் யார்?
3. வென்றியே கொண்டயானென் வீரமே காணவேண்டிற் துன்று நின் சேனையொடும் வருக எனத் துணைக்கண் செப்ப வன்றிறவரசன் சொற்றான்
   அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. யாருக்கு கூறப்பட்டது?
   இ. எச்சந்தரப்பத்தில் கூறப்பட்டது?
   ஈ. ''துணைக்கண் செப்ப'' என்பதன் கருத்து யாது?
4. ''இன்னொரு தரம் சொல்லுடா மகனே! நானென்ன உலகம் தெரியாதவளா?
   அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. யாருக்கு கூறப்பட்டது?
   இ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   ஈ. நலகம் என்பதன் திருந்திய வடிவம் யாது?
5. மாதினை விடுதியோ மறுக்குமாகில் காதுதல் கடன் என்று உள்ளம் கருதியது
   அ.இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. யாருக்கு கூறப்பட்டது?
   இ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
   ஈ. காதுதல் என்பதன் கருத்து யாது? (4+5+ 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட்களின் பொருளை உமது உரைநடையில் எழுதி, செய்யுளின் இடம்பெறும் அடிக்கோடிட்ட சிறப்பினையும் தருக.

அ. செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவான போதிலும்
வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வமே மெல்ல
மறைந்து நாள்தோறும் மாறிவந்
தொல்லை யில்வறுமைப்பதம் புக
உன்னினார் தில்லை மண்ணினார்

ஆ. தண்டாமல் ஈவது தாளாண்மை, தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை - அடுத்தடுத்துப்
பின் சென்றால் ஈவது கால்கூலி, பின்சென்றும்
ஈயான எச்சம்போல் அறு.

இ. பூத நாயகம் நீர் சூழ்ந்த
புவிக்கு நாயகன், இப்பூவில்
சீதை நாயகம் (வேறு) உள்ள
தெய்வ நாயகம் நீ செப்பும்
வேதநாயகம் மேல் நின்ற
விதிக்கு நாயகன் தான் விட்ட
தூதன் யான் பணித்த மாற்றம்
சொல்லவே வந்தேன். என்றான்.

ஈ. ஆயிடைக் கருணைவேந் தானை மீறிய
தீயரைத் தீச்சிறைப்படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுடுதிநூ லியம்புகின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்தினேரோ.

உ. '' தேட்டமாம்பசி யுள்ளவர் முன்பிலே
தின்றும் சோறுகறிகளை யின்பமாய்க்
காட்டில் காட்டி பறிப்பவர் போலவே
கறுத்த மேகம் வெருத்துக் கலங்குதே.
முட்டமாயொரு மூசாப் பதாகவே
மூடி மாரி விடாது சொரிந்திட
நாட்டம் வைத்தனை வோரையும் காத்தருர்
நற்றிலா மனையியே எங்கள் நாயனே. (4x5= 20 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விடைதருக.
உவமை நயம் என்னும் பாடப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைத்தருக.
   அ. சேக்கிழாரால் தாழ்ந்த உவமை கையாளப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக.
   ஆ. இளையான் குடிமாறனார் புராணத்தினூடாக மாறனாரின் கொள்கையின் உறுதிப்பாட்டினை விளக்குக.
   இ. இருட்டறை என்னும் பாடத்தில் வரும் சகிளாக் கிழ்வி பற்றி உமது மனப்படிவு யாது? (7 1/2+ 7 1/2 = 15 புள்ளி)

04. நீதிப்பாடல்கள் என்றும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு.
   அ. இனியவை நாற்பதில் கூறப்படும் இனிமையான செயல்களையும் இள்ளா நாற்பதில் கூறப்படும் துன்பம் தரத்தக்க செயல்களையும் தருக.
   ஆ. மணிமேகலை என்னும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு உதயகுமாரன் கொலை செய்யப்பட்டதற்கான சூழ்நிலையை விளக்குக.
   இ. கடலை நம்பி என்னும் பாடப்பகுதியினூடாக மீனவர் எதிர்கொள்ளும் இன்னல்களை விளக்குக. (7 1/2+ 7 1/2 = 15 புள்ளி)

5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

05. அங்கதன் தூது என்றும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு.
   அ. சிறுவனான அங்கதனை தன் வசப்படுத்த இராவணன் கூறிய விடயங்கள் யாவை?
   ஆ. இராவணன் சபையை அடைந்த அங்கதன் வியப்படைந்தமையை விளக்குக. (5x2=10)

06. ''இரட்சணிய யாத்திரிகம்'' என்னும் பாடத்தில் வரும் ஆத்தும விசாலி பற்றிய உமது மளப்படிவு யாது? (10 புள்ளிகள்)

07. ''தேவகிருபையை முன்னிட்டு வாரும்'' என்ற பாடப்பதினூடாக நீர் கூறும் சமூக விருமியங்களை விளக்குக. (10 புள்ளி)

# முதலாம் தவணைப் பரீட்சை ஆண்டு 10

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

# தமிழ்

ஒரு மணித்தியாலம்

திருமதி. A. சொலமன்
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

## பகுதி I

பின்வரும் வாக்கியூங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல்லுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊன் இங்கு *ஊன்* என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1) மாமிசம் 2) நீர் 3) உறக்கம் 4) விழிப்பு
2. வாழ்வின் கயமைகள் கழிய நாம் ஓர் காவியம் பாடலாமே இங்கு கயமை என்பதன் எதிர்ப்பதம்
   1) உயர்வு 2) கீழ்மை 3) மேன்மை 4) சிறுமை
3. வீசுகின்ற தண்ணிய தென்றலூடும் இதில் தண்ணிய என்பதன் ஒத்த கருத்து
   1) வெப்பம் 2) சூடு 3) குளிர்மை 4) தண்மை.
4. இயற்கையின் அசைவு தோறும் இன்பத்தை நுகரலாம் இங்கு இன்பம் என்பதன் எதிர்க்கருத்து
   1) ஆரவாரம் 2) மகிழ்ச்சி 3) சந்தோசம் 4) துன்பம்

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

5. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா...............
   1) வெள்ளிவிழா 2) மணிவிழா 3) பொன்விழா 4) பவள விழா
6. ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
   1) அட்டாவதானி 2) தேசாபிமானி 3) தசாவதானி 4) சதாவதானி
7. நாயின் இளமைப் பெயர் குட்டி என்பது போல, ஆட்டின் இளமைப் பெயர் ............ ஆகும்.
   1) கன்று 2) குட்டி 3) பிள்ளை 4) குருளை
8. தென்னையின் இலைக்குரிய மரபுப் பெயர் தலை என்பது போல புல்லின் இலைக்குரிய இளமைப் பெயர் .................. ஆகும்.
   1) வடலி 2) தாள் 3) நாற்று 4)கன்று
9. பூனை சீறும் என்பது போல மயில் ..................
   1) பிளிரும் 2) கூவும் 3) அகவும் 4) கரையும்
10. மதி, அம்புலி, நிலா, திங்கள் போன்ற பல பொருள் உணத்தும்ப ஓரெழுத்துச் சொல் ..................
    1) சூரியன் 2) ஆதவன் 3)பக்லோன் 4) சந்திரன்
11. விமானம் ஒட்டுபவன் ............ ஆவான்
    1) சாரதி 2) விமானி 3) வலவன் 4) பாகன்
12. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை............
    1) 30 2) 18 3) 216 4) 247

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

13. தமிழ்மொழியிலுள்ள குறில் எழுத்துக்களின் தொகை
    1) 95 2) 133 3) 18 4) 247
14. தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை
    1) 12 2) 16 3) 20 4) 50
15. வியங்கோள் வினைமுற்று விகுதிகளில் ஒன்று
    1) இ 2) ஆய் 3) அன் 4)இய
16. ஆடிய சிறுமி களைத்துப் போனாள் இங்கு ஆடிய என்பது
    1) வினையெச்சம் 2) வினைமுற்று 3) அடைமொழி 4) பெயரெச்சம்
17. கடற்றொழில் என்பதனைப் பிரித்தெழுதினால்
    1) கடல் + தொழில் 2) கடள்+றொழில் 3) கடற் + தொழில் 4) கடல் + றொழில்
18. பொறுத்தார் அரசாள்வார் இதில் அடங்கியுள்ள உட்பொருள்
    1) கோபம் 2)கவலை 3) பொறுமை 4) இன்பம்
19. மனம் நோகப் பேசுதல் எனும் மரபுத் தொடர் உணர்த்தும் பொருள்
    1) பூசி மெழுகுதல் 2) புண்படுத்தல் 3) பொடி வைத்தல் 4) துண்டுவிழுதல்
20. அந்தோ! வீடு பற்றி எரிகிறதே! இது எவ்வகை வாக்கிய வகையை சார்ந்துள்ளது.
    1) கூற்று வாக்கியம் 2) ஏவல் வாக்கியம்
    3) மெய்ப்பாட்டு வாக்கியம் 4) வினாவாக்கியம் (20 புள்ளிகள்)

## பகுதி II

I பின்வரும் கட்டுரைத் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
அ. நீர் சென்ற கல்விச் சுற்றுலா
ஆ.''சூழல் மாசடைதலும் பாதுகாத்தலும்''
இ. ''பாட்டுக்கொரு புலவன் பாரதி''
ஈ. ''சிறுதுளி பெரு வெள்ளம்'' என்ற கருப்பொருளை ஆதாரமாகக் கொண்ட கற்பனைச் சிறுகதை. (25 புள்ளிகள்)

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி நாளைய கல்விச்சுடரில் வெளிவரும்)